விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (21.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பங்காளிக் கட்சிகளை அழைத்து களநிலைமை குறித்து ஆராய்வு

## அவசர அவசரமாக நடத்துகிறார் ஜனாதிபதி

(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தல் ஜனவரியில் நடைபெறும் என உறுதி செய்யப்பட்ட நிலையில் அரசின் பங்காளிக் கட்சிகளுடன் அவசர பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்சம்பந்தமான பேச்சுக்களை நடத்துவதற்காக அரசின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனித் தனியாகச் சந்திக்கின்றார் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன் பிரகாரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தேசிய சுதந்திர முன்னணி கட்சிகளின் தலைவர்களுடன் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த கலந்துரையாடினார்.

ஏனைய கட்சிகளுடன் இந்த வாரத்தில் பேச்சுக்கள் நடைபெறும். ஹெல உறுமய கட்சியுடனான ஜனாதிபதியின் சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. 20ஆம் பக்கம் பார்க்க....

## ரணில் மலேசியா சென்றால் தமிழீழத்துக்கே வழி செய்யும்

### அமைச்சர் விமல் கிண்டல்

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐரோப்பிய விஜயம் புலிகள் மீதான தடையை நீக்க உதவியது.

விரைவில் அவர் மலேசியா செல்லவுள்ளார். அது தமிழீழத்துக்கே வழிசெய்யும் என அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பத்தரமுல்ல தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க தற்போது அண்டர் த ரேடார் ஆபரேசன் ஒன்றை மேற கொண்டுள்ளார். இதன் அர்த்தம் ராடர் திரையில் அகப்படாத விமானம் போன்று அடுத்தவர் கண்ணுக்குப் புலப்படாமல் செயலாற்றுவது என்பதாகும்.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் இவ்வாறுதான் ராடரில் சிக்காமல் கொழும்புக்கு வந்து தாககுதல் நடத்திவிட்டுச் சென்றன. அதே போன்று தற்போது விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் போன்ற நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளும் மறைவான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐரோப்பிய விஜயம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க உதவியது. விரைவில் அவர் மலேசியாவில் நடைபெற 20ஆம் பக்கம் பார்க்க....

## வெள்ள அனர்த்தத்தினால் 303 குடும்பங்கள் பாதிப்பு

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில்வெள்ள அனர்த்தம் காரணமாக 303 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிகக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்துக்கும் தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு வெள்ள நிவார 20ஆம் பக்கம் பார்க்க....

## வர்த்தகர்களுக்கு காணி ஒதுக்கீடு?

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவ திட்டமிடும் சிங்களவர்களுக்கு அரச காணிகளை ஒதுக்கிக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக முல்லைத் தீவு மற்றும் மன்னாரில் தனியார் ஆயத்த ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலை நிறுவ உத்தேசித்துள்ள சிங்கள வர்த்தகருக்கு சுமார் 75 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக மணலாறு (வெலிஓய) பிரதேசத்தில்மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குரிய 50 ஏக்கர் காணியில் பாரிய தொழிற்சாலைகள் உள்ளிட்ட 20ஆம் பக்கம் பார்க்க....

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## புலிகளின் தேவையை நிறைவேற்றவே ஐரோ.ஒன்றியத்தின் தடை நீக்கம் !

### தேசப்பற்றுள்ள இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இலங்கைக்கு எதிராக தலைதூக்கும் என்ற அழுத்தத்தை கொடுத்து கூட்டமைப்பினரதும் புலிகளினதும் தேவைகளை நிறைவேற்றவே ஐரோப்பிய ஒன்றியம்புலிகள்மீதான தடையை நீக்கியது எனத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார இத் தீர்ப்பை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உயர் நீதிமன்றத்தில் அரசாங்கத்தால் வழக்கு தொடர முடியுமென்றும் தெரிவித்தார். இது தொடர்பாக டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

தேசப்பற்றோடு தேசிய சிந்தனையோடு வெளிவிவகார அமைச்சராக செயற்பட்டவர் மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர் மட்டுமே ஆவார்.

அவருக்கு பின்னர் இன்று வரை வெளிவிவகார அமைச்சர்களாக இருப்போரும் அமைச்சில் தொழில்புரிவோரும் வெளி 20ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் இந்தியா பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எதிர்வரும் 5-ம் திகதி இந்தியாவுக்கு செல்ல உள்ளார்.

இந்தியாவில் ஒருவார காலம் தங்கியிருக்கும் அவர் அங்கு அரசியல் பிரமுகர்கள் பலரைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்வொன்றிலும் முதலமைச்சர் நினைவுப் பேருரை ஒன்றையும் ஆற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ரணிலுக்கு ஆதரவு திரட்ட நாடு திரும்புகிறார் சந்திரிகா



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மேடையேறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா குமாரதுங்கவை ரணிலுக்கு ஆதரவாக மேடையேற வைபதல் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ள சந்திரிகா குமாரதுங்க, இன்னும் இரண்டு வாரங்களில் நாடு திரும்பவுள்ளார்.

அதன் பின் ரணிலின் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு அவருக்கு ஆதரவாக உரை நிகழ்த்தவுள்ளார். ரணிலுக்கு ஆதரவாக சந்திரிகா மேடையேறும் போது அரசாங்கத்தின் முக்கிய 20ஆம் பக்கம் பார்க்க....

## மனித உரிமையை பாதுகாக்க இரகசிய அமைப்புத் தோற்றம்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீ லங்கா றெட்யூனியன் என்ற பெயரில் புதியதொரு இரகசிய அமைப்பு தோற்றம் பெற்றுள்ளது.

தாங்களைப் பற்றிய எந்தவித அடையாளங்கள், தகவல்கள் மற்றும் தொடர்புகளை வெளிக்காட்டாத நிலையில், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்த அமைப்பு தனது முதலாவது ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருவது குறித்து கவலை வெளியிட்டுள்ள இந்த அமைப்பு, இச்சம்பவங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தனது ஊடக அறிக்கை மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அண்மைக்காலமாக அரசாங்கத்தின் குண்டர்களும், பொலிஸாரும் இணைந்து பல்கலைகழக மாணவர்கள்மீது மேற்கொண்டு வரும்தாக்குதல்கள்நிறுத்தப்பட வேணடும் என்றும் 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் பறக்கும்படை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வியாபார நிலையங்களில் இடம்பெறுகின்ற மோசடிகளினை கட்டுப்படுத்த பறக்கும்படையென்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பறக்கும் படையிடம் இருதடவைக்கு மேல் மோசடிகள் அகப்பட்டால் வியாபார நிலைய உரிமம் ரத்துச் செய்யபட்டு இழுத்து மூடப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதத்தில் மாத்திரம் யாழ்.மாவட்டத்தில் முறைகேடான வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 53 வர்த்தகர்களிற்கு ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அதே மாதத்தில் காலாவதியான முகப்பூச்சு, மருந்து வகைகள் உணவுப் பொருட்கள் என 36 வகைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாண் ஒன்றின் சராசரி நிறை 450 கிராமாகும். ஆனால் சில இடங்களில் 300 தொடக்கம் 350 கிராம் வரையிலேயே பாண் விற்பனை செய்யப்படுகிறது.

பொருட்களின் பெட்டியில் ஒரு காலாவதித் திகதியும் உட்புறம் வேறொரு காலாவதித் திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு முறைகளில் வியாபார முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றை கட்டுப்படுத்துவதற்கே எந்நேரமும் தயார் நிலையில் இருக்க கூடிய திடீர்ப் பரிசோதனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு திடீர் திடீரென வியாபார நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்வதோடு வியாபார நிலையமொன்று இரு தடவை அகப்பட்டால் அதன் நிலைய உரிமம் இரத்துச் செய்யப்பட்டு கடை இழுத்து மூடப்படும் எனவும் எச்சரித்துள்ளார். (எ-4)

# தண்டவாளத்திலிருந்து விலகிய ரயில் வண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு இரவு தபால் சேவை புகையிரதத்தின் இயந்திரம் தண்டவாளத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்.புகையிரத நிலையத்திலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த தபால் புகையிரதத்தின் இயந்திரத்தை புகையிரதத்தின் மற்றைய பக்கத்திற்கு கொண்டு செல்வதற்கு முயன்ற வேளை புகையிரத இயந்திரம் தண்டவாளத்தை விட்டு விலகியுள்ளது.

தண்டவாளத்தை விட்டு விலகிய புகையிரத இயந்திரத்தை மீண்டும் தண்டவாளத்தில் இணைக்கும் முயற்சியில் தற்போது புகையிரத தொழிலாளிகள் ஈடுபட்டுள்ளனர். (எ-4)



## கடை வாடகைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0774366704

(C-8814)


# மரண அறிவித்தல்



## பொன்னையா அன்னலிங்கம்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் இல.23, கட்சன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னலிங்கம் நேற்று (20.10.2014) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரசோதியின் அன்புக் கணவரும் லதா, தம்பி (ராசன்), இந்திரன், மோகன், குமார், சிவா ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன், கிருசா, ரதி, வனிசியா, சோபனா, வினோ ஆகியோரின் மாமனாரும், பாலசிங்கம், கமலம், வியாலாட்சி, அன்னலட்சுமி, பரிமளம், கிருஷ்ணன், ஞானசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (21.10.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வட்டக்கச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பவிதா ஸ்ரோர்ஸ்,**
**ஸ்கந்தபுரம்.**

தகவல் :
பரமேஸ்வரன் (ராசன்)

(சி-8820)

# விஞ்ஞான தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கணித விஞ்ஞான மன்றத் தலைவர் பா.பாலகிரி தலைமையில் நடைபெறும்.

இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கலந்துகொள்கிறார். (எ)


## நிரந்தர வேலைவாய்ப்பு

உங்களது எதிர்கால வாழ்வுக்கு இதோ நிரந்தர வேலைவாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம், டொபி, பிஸ்கட், கோடியல், கிளவுஸ், ஆடை மற்றும் இலக்ரீசன், பாதுகாவலர், கனரக, மென்ரக சாரதி, சாரதி உதவியாளர், தனியார் துறைமுகம் போன்ற பல வேலை வாய்ப்புக்கள். சம்பளம் 18,000/= - 38,000/=. 18-50 வயது ஆண், பெண் உடனடியாகத் தேவை. உணவு +தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலை.

தொடர்புக்கு: 0776838231 / 0771116770

(சி-8817)



சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் பராமரிப்பில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு 05.11.2014ம் திகதிக்கு முன்னர் கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

பொது முகாமையாளர்

(C-8819)


# கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

# KN/KILINOCHCHI MAHA VIDYALAYAM

## தரம் -05 புலமைப்பரிசில் பாராட்டு விழா - 2014



(சி-8818)

**அனுசரணையாளர்கள் :**
**ரவி பான்சி**
**ஏ9 வீதி, கிளிநொச்சி.**

**புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**கல்விச்சமூகம்**
**கிளி/கிளிநொச்சி**
**மகா வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துகளின் மீது கல்வீசித் தாக்குதல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலைக்கு சொந்தமான இரண்டு பேருந்துகள் மீது நேற்று முன்தினம் மாலை கல் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவமானது வடமராட்சி குடவத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியாவில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தின் மீது மாலை 4.45 மணியளவிலும் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தின் மீது மாலை 5 மணியளவிலும் கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் இரண்டு பேருந்துகளின் கண்ணாடிகள் உடைந்ததோடு பேருந்துகள் இரண்டும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

தாக்குதலுக்குள்ளான பேருந்துகளில் பயணித்த பயணிகளை உரிய இடங்களில் கொண்டு சென்று இறக்கி விட்டு அதன் பின்னர் பொலிஸ் நிலையத்தில் சாரதிகளால் முறையிடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் ஈடுபட்ட நபர்கள் தமது முகத்தினை துணியால் கட்டியபடி வந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-60)

# பயன் தரும் மரக் கன்றுகள் வடமராட்சியில் வழங்கப்பட்டன



(கரணவாய்)

வளமான தாயகம் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் மூலம் வடமராட்சியில் பயன் தரு மரக்கன்றுகள் நேற்றைய தினம் வழங்கப்பட்டன.


இதில் கரணவாய் ஜே/350கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் கிராம சேவையாளர் பா.வைகுந்தன் தலைமையில் வழங்கப்பட்டன. வீட்டுத் தேவைக்கான காய்கறிகளை இலகுவான முறையில் பெற்றுக்கொள்வதற்கும் ஆரோக்கியம் மிக்க சமூகத்தைகட்டியெழுப்பும் நோக்கத்துடன் இம்மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஆறாவது கட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-60)

# நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு குளிர்சாதனப்பெட்டி அன்பளிப்பு

வன்னியின் நட்டாங்கண்டல் அரசினர் வைத்தியசாலைக்கு கனடாவைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளது அமைப்பான கனடாவின் அன்புக்கரங்கள் தமிழர் இணையம் மருந்துகளை பேணிப்பாதுகாக்க குளிர் சாதனப்பெட்டியொன்றை அண்மையில் வழங்கியுள்ளது.

இதனை வலி. வடக்கு பிரதேச சபையின் பிரதி தவிசாளரும் உதவும் கரங்கள் அமைப்பின் இணைப்பாளருமான ச.சஜீவன் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளிடம் அதனை அண்மையில் உத்தியோக பூர்வமாக கையளித்திருந்தார். (இ



# இலவச கருத்தரங்கு இன்று இடம்பெறும்

(நல்லூர்)

கோப்பாய் லயன்ஸ் கழகமும் கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனமும் இணைந்து நடத்தும் இலவச கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் மத்தி இராசன் சனசமூக நிலைய மண்டபத்தில் லயன் வி.நிரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி மற்றும் கோழி வளர்ப்பு சார்ந்த வற்றின் விளக்கங்கள் இடம்பெறவுள்ளன.

முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் வயது வேறுபாடின்றி தகுதியுடைய அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

இக்கருத்தரங்கின் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட உப ஆளுநர் வை. தியாகராஜா, லயன்ஸ் கழகங்களின் வலயத் தலைவர் எஸ். குணதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையும் பயனாளிகளுக்கு கருத்தரங்கு முடிவில் சான்றிதழ் மற்றும் வருமான ஊக்குவிப்பு திட்ட ஆலோசனைகள் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-134)

# தீபாவளி திருநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளித் திருநாள் நிகழ்வானது நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆறுதல் நிறுவன இயக்குநர் சுந்தரம் டிவகலாலாவும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் த. ஜெயசீலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜயசூரியவின் வழக்கு விவகாரம்

## ஜனவரி 15 விசாரணை

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரான சட்டத்தரணி உபுல் ஜயசூரியவை பின்தொடர்ந்தவர்களை இன்னும் இனங்காணவில்லை என்று கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்த விவகாரம், கொழும்பு பிரதான தேரர் கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில் விசாரணைக்கு நேற்று திங்கட்கிழமை எடுத்து கொள்ளப்பட்டபோதே குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கண்ட விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.



சந்தேக நபர்களை வீடியோ காட்சிகளின் ஊடாக இனங்காண்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அப்பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்து முறைப்பாடு தொடர்பிலான விசாரணையை பிரதான நீதவான், ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ)

# பால சூரியவுக்கு புதிய பொறுப்பு

முன்னாள் பொலிஸ்மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரிய, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராக இன்று செவ்வாய்க்கிழமை கடமையேற்கவுள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர், 2011 ஆம் ஆண்டு கட்டுநாயக்கவில் இடம்பெற்ற துப்பாக்கிசூட்டு சம்பவத்தையடுத்து, பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இராசி பலன்

21.10.2014

(ஐப்பசி 04, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு

திரயோதசி பின்னிரவு-1.47 மணிவரை

உத்தரம் பின்னிரவு-1.55 மணிவரை

இராகுகாலம்-3.02-4.32 மணிவரை

சுபநேரம்-10.32-12.02 மணிவரை

பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி காண்பீர்கள்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு** புதிய திட்டங்கள் கைகூடும், குடும்ப ஒற்றுமை மேலோங்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு யாழில்

யாழ்.மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களப் பிரிவினால் யாழ்.மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வுஎதிர்வரும் 25 ஆம்திகதி சனிக்கிழமைமுற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையாழ்.வேம்படிமகளிர்உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வெற்றிடங் களுக்கான ஆளணியி னரை தேர்வு செய்வதற்காக அரசமற்றும்தனியார்துறையை சேர்ந்த வேலைவாய்ப்பு நிறுவனங்கள் தொழிற்பயிற்சி அதிகார சபை(VTA),உயர்தொழில்நுட்ப நிறுவனம் (ATI), காகில்ஸ், சுற்றுலாத்துறை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பாதுகாப்பு சேவை நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் , ஆடைத் தொழிற்சாலைகள், கணனி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர்உற்பத்திநிறுவனங்கள் ஆகியன வருகை தர வுள்ளன.

எனவே தொழில் வாய்ப்பிற்காக காத்திருக்கும் அனைவரும் உரிய நேரத்தில் தமது சுய விபரக்கோவைமற்றும்ஆவணங்களுடன் பங்குபற்றி பொருத்தமான வேலைவாய்ப்புக்கள் தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை பெற்று பயனடையு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சேவையினூடாக தங்களுக்கான ஆளணியினரை பெற்றுக் கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும்மேலதிக விபரங்களை பெற விரும் புவோர் 0212219359 என்ற அலுவலக தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் அறிவித்துள்ளார். (இ-3)




# சுன்னாகம் பகுதியிலுள்ள கிணற்று நீரினில் நாளுக்குநாள் அதிகரிக்கிறது கழிவு ஒயில்

## அந்தரிக்கும் மக்கள் அசண்டையீனமாக அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் கழிவு ஒயிலின் அளவு மேலும் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் வீட்டுக் கிணறுகளில் கடும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருவதாகவும் அம் மக்கள் தெரிவித்தனர்.

கோவில்களிலுள்ள கிணறுகளிலும் இவ் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளமையால் குடிநீருக்கு அலைந்து திரிய வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகவும் அம் மக்கள் கவலையு டன் கூறுகின்றனர்.

சுன்னாகம் பிரதேசத்திலுள்ள 250 இற்கும் மேற்பட்ட கிணறுகளில் கழிவெண்ணெய்க்கசிவு பல மாதங்களாக இருந்து வருகின்றது.

இவ் கழிவெண்ணெய்க் கசிவிற்கு சுன்னாகம் மின்சார சபையினரே காரணம் என அப்பகுதி மக்கள் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

தற்போது மழை காலமும் ஆரம்பித்துள்ளமையினால் கிணறுகளில் மழை நீர் நிரம்பி கழிவெண்ணெய் பரவி காணப்படுகின்றது.

இதனால் கழிவெண்ணெய் கீழிறங்கி நிலத்தடி நீரோடு கலந்து விடுவதனால் நீண்ட காலத்திற்கு இக் கழிவு வெண்ணெய்ப் பிரச்சினை காணப்படும் அபாயமுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தற்போது காணப்படுகின்ற இப்பிரச்சினையினால் தங்களது வீட்டுத் தேவைகளைக்கூட செய்ய முடியாத நிலை யேற்பட்டுள்ளது.

தோட்டக் கிணறுகள் சில வற்றிலும் கழிவெண்ணெய் பரவியுள்ளதனால் பயிர்கள் போதிய வளர்ச்சியின்றி காணப்படுகின்றன.

இந்நிலைமை பலமாதகாலமாக காணப்படுகின்ற போதிலும் அதிகாரிகள் எவரும் உடனடித் தீர்வினைப் பெற்றுத்தராமலுள்ளனர்.

எமது இப்பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் கூடிய கவனமெடுத்து உரிய நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும்.

இம் மழை காலத்திற்குள் ஒரு உருப்படியான தீர்வை உரியவர்கள்பெற்றுத்தர முயல வேண்டும் என அம் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சுன்னாகம் பிரதேசத்திலுள்ள கிணறுக ளில் கழிவெண்ணெய் கசிவு தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் விசேடகவனம்செலுத்தியுள்ளது. இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, பிரதேசசெயலகம், பிரதேச சபை ஆகியவற்றிடம்அறிக்கை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## பல்பொருள் சந்தை நிகழ்வு



(கொழும்புத்துறை)

மக்கள் ஒற்றுமை மற்றும் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில் பல்பொருள் சந்தை நிகழ்வு ஒன்று நாவாந்துறை சென்மேரிஸ் ஆலயத்தில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலஸ் ஆலயப் பங்குத்தந்தை இராஜசிங்கம் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நாவாந்துறை பக்தி சபைகள் மற்றும் இணைப்பு பணிசபைகள் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

இதேபோன்று கடந்த வாரம் புனித நீக்கிலஸ் ஆலயத்திலும் பல்பொருள் சந்தை நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-51)

தியாகி அறக்கொடை நிறுவன சிறுவர் இல்ல பிள்ளைகளின் சிறுவர் தின விழா கடந்த 17 ஆம் திகதி சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## புத்தகப் பை சவால்

நாம் நண்பர்கள் அமைப்பின் ஊடாக வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி செயற்பாட்டிற்காக புத்தகப்பை சவாலை ஆரம்பித்துள்ளனர்.

இச் சவாலுக்கு அனைத்து தரப்பினரும் முன்வந்து தம்மால் முடிந்த கற்றல் உபகரணங்களை வழங்க முடியும்.

இதன் மூலம் வறுமையிலுள்ள மாணவர்களை ஊக்குவிக்க முடியும் என நாம் நண்பர்கள் அமைப்பு எதிர்பார்த்துள்ளது.

இச் சவாலானது நேற்று முன்தினம் 5 மணிக்கு ஆரம்பமாகியிருந்தது.

இதன்போது புத்தகப்பை சவாலின் முதலாவது சவாலில் சந்திரராஜா அகிலன் மற்றும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் கயூரன் ஆகியோர் ஒரு தொகை கற்றல் உபகரணங்களை வழங் கினர்.

எனவே இச்சவாலில் கைகோர்க்க விரும்புவோர் 077 6121016, 0771641413 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என நாம் நண்பர்கள் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இச் செயற்பாடானது கல்வியில் வறுமையினை ஒழிப்போம் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-23)

## மதுபான தவிர்ப்பு தொடர்பான ஆலோசனைச் செயற்பாடு

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அரச, அரசசார்பற்ற சமூகத்தலைவர்களுக்கு மதுபான தவிர்ப்புக்கான ஆலோசனைச்செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நாவாந்துறை பிரதேசத்தின் கிராம சேவையாளர் பிரிவுகளான ஜே/84 தொடக்கம் ஜே/87 வரையுள்ள பிரிவுகளில் அமைந்துள்ள கழகங்கள், அமைப்புக்கள் கலந்து கொள்ளும் ஒன்றுகூடல் நிகழ்வானது இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குநாவாந்துறைசென்.மேரிஸ் சனசமூக நிலைய மண்டபத்தில்நடைபெறவுள்ளது. மேற்படி ஒன்றுகூடலில் சமூகப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அந்த அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-7-5)

# வரி விபரத்திரட்டை சமர்ப்பிக்கும் இறுதித்தினம் எதிர்வரும் நவ.30

வருமான வரி செலுத்துவோர் வரி மதிப்பீட்டாண்டான 2013/2014 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விபரத் திரட்டுக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய வரிகொடுப்பனவுக்கான பணம் செலுத்தும் படிவத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய உதவி ஆணையாளர் ஆரம்பித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106(1) ஆம் பிரிவின் கீழ் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வரி மதிப்பாண்டு 2013/2014 இற்கான வருமான வரித் திரட்டுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக் கோவைகளை வைத்திருப்போர் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இச் சட்டத்தின் படி வரி மதிப்பாண்டுக்கான வரிக் கொடுப்பனவுகளை கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்று வருமான வரி செலுத்துவோருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந் தது.

எவ்வாறாயினும் இதுவரை வரியைச் செலுத்துபவர்கள் அதனை உரிய முறையில் இலங்கை வங்கியில் செலுத்தி வரி விபரத் திரட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த சட்டத் தின் படி வியாபாரம் அல்லது வர்த்தக இலாபங்கள் மற்றும் வருமானங்களை வெளிப்படுத் துவோர் வரிவிபரத் திரட்டுடன் தமது நிதியாண்டுக்கான இறுதிக்கணக்குகளையும் இணைக்க வேண்டும். இது தொடர்பில்பிரச்சினைகள் ஏதும் இருக் குமாயின் உதவி ஆணையாளருடன்கலந்தாலோசிக்கலாம்.

மேற்படி வரி மதிப்பாண்டுக்கானவருமானவரிக்குபொறுப்புடையவர்களாக இருந்தும் இதுவரை வரிக் கோவைகளை வைத்திருக்காதவர்களும்தாமாக முன்வந்து வரி கோவைகளைத் திறக்கலாம். இவ்வாறு திறந்து உரிய வரிகளை செலுத்தி வரி விபரத்திரட்டுக்களை குறித்ததிகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்குரிய விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வரியை செலுத்தாமல் வரி விபரத்திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டி கழிக்கப்படும் இடத்து தண்டப்பணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளுக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் இடம் உண்டு.

எனவே உரிய வேளையில் வரிக் கொடுப்பனவுடன் வரி விபரத் திரட்டையும் சமர்ப்பிப்பது தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளுமாறு உதவி ஆணையாளர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வடபகுதி லயன்ஸ் கழகங்களும் யாழ்ப்பாணத்திலுள்ள விழிப்புலனற்றோர் அமைப்புக்களும் இணைந்து வெள்ளைப்பிரம்பு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நேற்று முன்தினம் சுன்னாகத்தில் நடத்தியிருந்தது.

இவ்விழிப்புணர்வு ஊர்வலமானது காலை 8.30 மணிக்கு சுன்னாகம் பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமாகி வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தை சென்றடைந்தது.

(படங்கள்-மானிப்பாய் செய்தியாளர்)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மகிந்தவினை ஆதரிக்காது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கே ஆதரவை வெளியிடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆங்கில நாளிதழ் ஒன்றில் இந்த எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பெயர் குறிப்பிட விரும்பாத நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கருத்துப்படி தமது கட்சி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒருமுறை ஆட்சியில் அமர தமது ஆதரவளிக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமது நிலைப்பாட்டை வெளியிடுவதே பொருத்தமானது என்று கூட்டமைப் பின தலைவர் ஆர்.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் ஆளும் கட்சி வேட்பாளருக்கு ஆதரவளிக்காத தமிழ் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவிக்காவிட்டாலும் தமிழ் மக்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கே தமது ஆதரவை வெளிப்படுத்துவர் என்று அந்த செய்தித்தாள் எதிர்வுகூறியுள்ளது. (இ)


## கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 33 1/4 சூரி செவ்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1974 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/2862 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 3 1/2 உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ GS<br>தொ.இ: B/1980 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 16 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/2863 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 43 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1981 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2865 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 45 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA, MBA/ கணக்காளர்<br>தொ.இ: B/1982 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 52<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/2866 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகக் குடும்பத்தினர்களின் "மாபெரும் பொன்மாலைப் பொழுது" சிறுவர்கள் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதன் சில பதிவுகள்...



பிரதம விருந்தினர் தொழிலதிபர் திரு.திருமதி தி.மோகன்ராஜ் அவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.




பேரப்பிள்ளை சார்பில் பேராசிரியர் சிவலிங்கராசா *மலரும் மலர்கள்* நூலை வெளியிடுகின்றார்.


சிறுவர் பூங்கா முன்பள்ளி கல்வி வரலாற்றில் ஓர் புதிய தடம்...
விளையாட்டு, மகிழ்ச்சி, சுதந்திரம், ஆக்கத்திறன், அழகியல், அன்பு, நெறி, ஆளுமை, ஆற்றல் விருத்தி.... KIDS PARK PRE SCHOOL & DAY CARE CAMPUS 528, PALALY ROAD, THIRUNELVELY. T.P-0776456974
கல்விப் பணியே கடவுள் பணி.




பணிப்பாளர் திருமதி கர்ணிதனபாலன் தலைமையுரை ஆற்றுகின்றார்.



பெற்றோர் சார்பில் முதற்பிரதியை யாழ். நீதிமன்ற நீதிபதி திரு. சிவகுமார் பெறுகின்றார்.



ஆசீர்வதிப்போர் சார்பாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்



ஆசிரிய சார்பில் நன்றியுரை திருமதி பிரதீபா ஜெயகாந்தன்




ஆற்றுகைகளுக்கான ஆலோசகர் சார்பில் திருமதி ஞா.கணேசநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்.தேசியகல்வியியற்கல்லூரி



சிறப்பு விருந்தினர் சார்பில் யாழ். வலய ஆரம்பக் கல்வி கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மைதிலி





ஆற்றுகை மேடை ஏற்றும் நிபுணர்கள் சார்பில் க.இ. கமல நாதன் (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்)



பெற்றோர் ஆலோசகர் சார்பில் கிளிநொச்சி பிரதேச செயலர் திரு. கே. நாகேந்திரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோமாளியின் கதை போன்றதே ஜனாதிபதி மகிந்தவின் அறிவிப்பு

## ஜே.வி.பி தலைவர் கிண்டல்

"தமிழீழ எண்ணத்திலிருந்து விடுபட்டால் மட்டுமே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளமை மிகவும் கீழ்த்தரமானது. சிங்களக் கோமாளியின் கதை போன்றது' என ஜே.வி.பியின் தலைவரும நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக தேர்தலில் போட்டியிட்டாவது ஆட்சியைக் கைப்பற்றிவிடுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தப்புக் கணக்கு போடக் கூடாது. ஏற்கனவே இழைத்த தவறை ரணில் மீண்டும் மீண்டும் இழைக்கக் கூடாது". குடும்ப ஆட்சியை நிலைநிறுத்தப் போராடும் மகிந்தவை தனிமைப் படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முதலான அரசியல் கட்சிகளுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். "ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு மக்கள் கேட்கவில்லை.

நாமும் கேட்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் அரசிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் என எந்தக் கட்சியும் கேட்கவில்லை. அப்படியென்றால் யாருக்காக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகிறது? மகிந்தவின் குடும்ப ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கொள்கையைக் கைவிட்டால் மாத்திரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கத் தான் தயார் என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மகிந்த.

இது மிகவும் கீழ்த்தரமான பேச்சாகும். மின்குமிழின் வெளிச்சம் செல்லும் இடமெல்லாம் திருடன் ஓடிச் செல்வது போல ஜனாதிபதி மகிந்த அங்கும் இங்கும் ஓடிச செல்கின்றார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தாயாருக்கு இந்த நேரத்தில நான நன்றி கூறுகின்றேன். இதற்கு மேல அவர் பிள்ளைகள் பெறாததால் அவருக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

நாட்டின் ஆட்சி ஜனாதிபதி மகிந்தவிடம். பாதுகாப்பு கோத்தபாயவிடம், பொருளாதாரம் பஸிலிடம், நாடாளுமன்றம் சமலிடம், மகன் நாமல் அடுதத ஜனாதிபதி, இன்னொரு மகன் கடற்படையில், மற்ற மகன் விண்வெளி ஆய்வில், மனைவியின் தம்பி வியன்னா தூதுவர், உறவினர் அமெரிக்கத் தூதுவர். இவ்வாறு எல்லாம் மகிந்தவின் குடும்பத்திடமே உள்ளது. இதற்கு ஓர் எல்லை இல்லையா? இதற்கு மேல் குழந்தைகளைப் பெறாததால் மஹிந்தவின் தாயாருக்கு நான் நன்றி கூறுகின்றேன்" என அநுர குமார எம்.பி மேலும் தெரிவித்தார். (இ-5)

# வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார். 40இலட்சத்து 78 ஆயிரத்து 581 ரூபாய் பெறுமதியான நாணயத்தாள்களை கடத்த முயன்றபோதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

150 பஹ்ரேன் தினார், 6,500 யூரோ, 31,500 சவுதி ரியால், 400 குவைத் தினார், 2,000 கட்டார் ரியால், 8,000 சுவிஸ் பிராங், 180 ஓமான் ரியால் உள்ளிட்டவற்றை இவரிடமிருந்து சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

தெஹிவளையைச் சேர்ந்த 48 வயதான இவர், டுபாய்க்கு புறப்படவிருந்தபோதே கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 180 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 60 |
| பயற்றங்காய் | 160 | 140 | 120 |
| லீக்ஸ் | 160 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 20 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 |
| போஞ்சி | 20 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 110 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30-35 |
| இராசவள்ளி | 140 | 130 | 160 |

# 8 தொழிலாளர்கள் கடத்தி கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் லெஸ்பெலா மாவட்டத்தில் உள்ள அப்பாஸ்கோத் பகுதியில் கோழிப் பண்ணைகள் உள்ளன. அங்கு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் பணிபுரிகின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள ஒரு கோழிப் பண்ணைக்குள் நேற்று முன்தினம் துப்பாக்கியுடன் மர்ம நபர்கள் புகுந்தனர். அவர்கள் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த 9 பேரை மலைப் பகுதிக்கு கடத்தி சென்றனர்.

பின்னர் அவர்களை வரிசையாக நிற்க வைத்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதனால் குண்டு பாய்ந்து 8 பேர் பரிதாபமாக இறந்தனர். ஒருவர் மட்டும் படுகாயம் அடைந்தார்.

அவர் ஜாம்குலாம் குவாதிர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முல்தான், முஷாபர், பகவல்பூர் உள்ளிட்ட நகரங்களை சேர்ந்தவர்கள்.

இந்த கொடூர சம்பவத்துக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. இக்கொலைக்கு பலுசிஸ்தான் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. தொழிலாளர்களை சுட்டுக் கொன்றவர்கள் கைது செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 170

கலாமினி




ரஜி ரஜீவன்




ஜி.மதீசன்

ராமுவும் சோமுவும் கடல்ல மீன் பிடிச்சிட்டு இருந்தாங்க. ஒரு இடத்தில் நிறைய மீன்கள் கிடைச்சது. போதும்கிற அளவு மீன் கிடைச்சதும் ராமு ஒரு சோக் துண்டை எடுத்து கொண்டு கடலில் குதித்தான். சாமுவுக்கு எதுவும் புரியவில்லை.கொஞ்ச நேரம் கழிச்சு ராமு தண்ணிக்கு மேல வந்தான். ஏன்டா தண்ணீல குதிச்சாய் சோமு கேட்டான். இங்கதான் நிறைய மீன் கிடைச்சது. அதனால.. நாளைக்கும் இதே இடத்துல மீன் பிடிக்கலாம்னு அடையாளம் போட்டு வந்தேன்னான் ராமு. எங்கடா அடையாளம் போட்டனு சோமு கேட்க படகோட அடிபக்கத்துல ஒரு பெருக்கல் குறி போட்டிருக்கிறேன் என ராமு சொன்னான். சோமு உடனே ராமுவை முட்டாள் என திட்ட ஆரம்பித்தான்.ஏன்டா என்னை திட்றனு ராமு கேட்டான். பின்ன அறிவிருக்கறவன் செய்யற வேலையா இது..நாம எடுத்துக்கிட்டு வந்திருக்கிறது வாடகை படகு. நாளைக்கும் இதே படகுதான் கிடைக்கும்னு என்ன நிச்சயம் என சொன்னான் அந்த புத்திசாலி.

நிரோஜன் யோகராஜ்




மயூரன் சுவிற்றொனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி மசூதியில் 21 பேர் உடல் சிதறிப் பலி!

## ஈராக்கில் 10 நாட்களில் 150 பேர் பலியாகினர்

(பக்தாத்)

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஈராக் மற்றும் சிரியாவின் பல பகுதிகளை பிடித்து கொண்டு அதை இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர்.

அவர்களுக்கு எதிராக ஈராக் இராணுவத்துடன் இணைந்து அமெரிக்க கூட்டணி படைகள் செயற்படுகின்றன.

மேலும் ஷியா பிரிவினர் ஐ.எஸ். ஐ.,எஸ் தீவிரவாதிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அவர்களுக்கு எதிராக செயற்படுவதாகவும் தீவிரவாதிகள் கருதுவதால் ஷியா பிரிவினர் அதிகமாக வாழும் பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

கடந்த 10 நாட்களில் மட்டும் 150இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் மேற்கு பக்தாத்தில் உள்ள ஷியா மசூதியில் நேற்றுக் காலை நடந்த குண்டுவெடிப்பில் 21 பேர் பலியானார்கள் 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

மேற்கு பக்தாத்தில் உள்ள அப்பாஸ் அல் அட்லி மசூதியில் ஒரு மர்ம மனிதன் புகுந்தான். பின்னர் அவன் தான் அணிந்து இருந்த வெடிகுண்டு ஜாக்கெட்டை வெடிக்க செய்தான். இதில் மசூதி கடும் சேதம் அடைந்தது.

இந்த சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்புதான் ஷியா பிரிவினர் வாழும் பகுதியில் நடைபெற்ற 3 கார்வெடிகுண்டு தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.


கடந்த செவ்வாய்க்கிழமை சோதனை சாவடி பகுதியில் நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். 65 பேர் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 5தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

இஸ்லாமிய பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 5 பேரை கென்ய இராணுவ வீரர்கள் சுட்டு கொன்று பயங்கரவாத தாக்குதலை தடுத்து நிறுத்தியதாக கென்ய இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

எதியோப்பியாவில் இருந்து கென்யாவிற்கு வெடி பொருட்களுடன் ஒரு கார் வந்ததாகவும் அதில் சந்தேகத்திற்கிடமளிக்கும் வகையிலான 5 இஸ்லாமிய பயங்கரவாதிகள் தங்கள் ஆடைகளில் வெடி பொருட்கள் கட்டி இருந்ததாகவும் அவர்கள் தற்கொலை படையினராக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

கென்யா எல்லையில் இடைமறித்து நடத்தப்பட்ட சோதனையில் இது தெரிய வந்ததை அடுத்து அவர் களை கென்ய இராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றனர். மேலும் அவர்களிடம் இருந்த 100 கிலோ கிராம் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-5)



வியட்நாமில் பண்ணை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் அதிக பால் தரும் மாடுகளுக்கு விருது வழங்கும் போட்டியில் 16000 மாடுகள் பங்கெடுத்தன. இதில் தெரிவு செய்யப்பட்ட 126 மாடுகளில் முதலிடத்தை 4 வயதுடைய 860 கிலோவுடைய மாடு பெற்றுக் கொண்டது. இது ஒரு நாளில் சராசரியாக 46 கிலோ கிராம் பால் கறக்கிறது.

## ஐ.நா.சபை பொது செயலாளருடன் பாக்.பாதுகாப்பு ஆலோசகர் பேச்சு

காஷ்மீர் விவகாரத்தில் தலையிடக் கோரி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் பாகிஸ்தான் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இதுதொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அலுவலகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் பாகிஸ்தானின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் கடந்த சனிக்கிழமை இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அப்போது, இந்தியாவுடனான எல்லைப் பகுதியிலும், சர்வதேச எல்லைக் கோட்டுப் பகுதியிலும் நிலவி வரும் நெருக்கடியான சூழ்நிலை குறித்து தெரிவித்த அவர், அதை சமாளிக்க ஐ.நா. சபை தலையிட வேண்டும் என்று கேட்டுக கொண்டார்.

மேலும் அவர், இந்தியா பக்குவத்துடன் நடந்து கொள்ள அறிவுறுத்தப்பட வேண்டும். அந்நாட்டின் படைகள் நியாயமற்று தாக்குதல் நடத்துவதை தடுக்க வேண்டும்.

ஜம்மு-காஷ்மீர் உட்பட எல்லைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலமே இந்தப் பிராந்தியத்தில் நிலையான அமைதியை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

அவருக்கு பான் கீ மூன், இருநாட்டு எல்லையில் நிலவிவரும் அத்துமீறல் மற்றும் உயிரிழப்பு போன்ற சம்பவங்களை தடுக்க தேவையான நடவடிக்கைகளை இருநாடுகளும் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

முன்னதாக கடந்த 11 ஆம் திகதி பான் கீ மூனுக்கு சர்தாஜ் அஜீஸ் கடிதம் எழுதியிருந்தார். அதில் இருநாட்டு எல்லைப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால், பாகிஸ்தானின் இக்கோரிக்கையை ஐ.நா. சபை நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

பிலாவல் பூட்டோ உறுதி: இதனிடையே, கராச்சியில் பேரணியில் கலந்துகொண்ட பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ கூறியதாவது,

இந்தியாவிடம் இருந்து காஷ்மீரைப் பெறுவோம். காஷ்மீர் பிரச்சினையை கூறி இந்தியா- பாகிஸ்தான் பேச்சுவார்த்தையை முடக்கி வைக்க முடியாது. காஷ்மீரில் அமைதி நிலவவே நான் விரும்புகிறேன் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

## எபோலாவினைக் கண்டு யாரும் அலற வேண்டாம்

### ஒபாமா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் 4 ஆயிரத்து 500 பேரை பலிகொண்டுள்ள எபோலா வைரஸ் நோய், அமெரிக்காவையும் அச்சுறுத்தி வருகிறது. அங்கு 3 பேரை ஏற்கனவே இந்த நோய் தாக்கியுள்ளது. ஏறத்தாழ 100 பேர் எபோலா வைரஸ தாக்குதல் சந்தேகத்தின்பேரில் கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்த வைரஸ் நோயை ஒபாமா நிர்வாகம், கையாண்டு வரும் விதம், விமர்சனங்களை ஏற்படுத்தி வருகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து அமெரிக்கா வருவோருக்கு தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க எம்.பிக்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஒபாமா உரை ஆற்றினார். அப்போது அவர், "மேற்கு ஆபிரிக்க மக்களின் அமெரிக்க பயணத்துக்கு தடை விதிக்கும் யோசனையை ஏற்பதற்கில்லை. இப்படி உலகின் ஒரு மொத்த பகுதிக்கே சீல் வைக்க முற்படுவது, நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். வைரஸ் நோய் கண்டு யாரும் மனநோயுக்கு ஆளாகவும் தேவையில்லை. அச்சம அடையவும் வேண்டாம்" என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கேட்டுக் கொண்டார். (இ-5)




## கேள்விக்குப் பதிலளித்த கொடூரக் கொலையாளி

பிரேசிலில் குறைந்தது 39 பேரைக் கொலைசெய்ததாக பொலிஸாரிடம் குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளதாக கூறப்படுகின்ற இளைஞர் ஊடகவியலாளர்களுக்கு முன்னால வந்து கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார். தியாகோ ரொச்சா என்ற இநத 26 வயது இளைஞர் தனது செயல்களுக்காக வருத்தம் தெரிவித்துள்ளதுடன் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கோர விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

பொலிஸ் ஊழியரான தியாகோ ரொச்சா தான் மனநோயாளி என்று எதனையும் கூறவில்லை.

ஆனால், அவ்வப்போது தனது மனதுக்குள் எழுந்த கோப உணர்வே மற்றவர்களை கொலை செய்யத் தூண்டியதாகக் கூறியுள்ளார்.

பிரேசில் வரலாற்றில் மர்மமான சீரியல்-கொலைகாரர்களிகளில் ஒருவர் அவர் என்பதை உணர்கின்றாரா என்று ஒரு செய்தியாளர் கேட்டபோது, ரொச்சா அசட்டையாக தோளை அசைத்தவாறு புன்னகைத்துள்ளார்.

கோயாஸ் நகரத்திலும் சுற்று வட்டாரத்திலும் 3 ஆண்டு காலப்பகுதியில் எதேச்சையாக அகப்பட்ட இளம் பெண்கள், வீடற்றவர்கள், என 39 பேரை தியாகோ ரொச்சா கொலை செய்துள்ளார். (இ-5)

## தீவிரவாதிகளுக்கு எதிராக போராடும் குர்திஷ் படைப் பிரிவுக்கு ஆயுதங்கள்!

### அமெரிக்கா வழங்கியது

சிரியாவில் குர்திஷ் இராணுவ வீரர்களுக்கு விமானம் மூலம் அமெரிக்கா ஆயுதங்களை வீசியது.

ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பிடித்து கைப்பற்றி ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதை இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர்.

சிரியாவில் துருக்கி எல்லையில் உள்ள கொபானே நகரமும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் சமீபத்தில் வந்தது. அந்த நகரை மீட்க அப்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் குர்தீஷ் இனத்தவர் இராணுவம் அமைத்துள்ளனர். அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் கடுமையாக போராடி வருகின்றனர்.

அவர்களுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. தரைவழியாக போரிடும் குர்தீஷ் இராணுவத்துக்கு உதவ அமெரிக்காவின் சி-130 ரக போக்குவரத்து விமானம் மூலம் நேற்று முன்தினம் ஆயுதங்களை வீசியது. மேலும் அவர்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் உணவு பொருட்களும் வீசப்பட்டன. இது குர்தீஷ் வீரர்களுக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் இந்த [illegible] நடவடிக்கைக்கு அதன் நட்பு நாடான துருக்கி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இவர்களும் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்கள தான் என தெரிவித்துள்ளது. பி.கே.கே. என்ற அமைப்பை சேர்ந குர்தீஷ் தீவிரவாதிகள் பல ஆண்டுகளாக துருக்கிக்கு இடையூறாகவும் பிரச்சினைகள் ஏற்படுத்தியும் வருகின்றனர். இதனால் தான் அவர்களுக்கு அமெரிக்கா செய்து வரும உதவியை துருக்கி எதிர்க்கிறது.

துருக்கி ஜனாதிபதி ரெசிப் தயிப் எர்கோடன் அமெரிக்காவிடம் இருந்து குர்தீஷ் படைகள் ஆயுதங்கள் [illegible] தெரிவித்துள்ளார். (இ-5)

## அவதூறு ஏற்படுத்தினால் கடும் தண்டனை விதிப்பு!

### பிரிட்டன் எச்சரிக்கை

(பிரித்தானியா)

இணையத்தளத்தில் மற்றவர்களுக்கு எதிராக அச்சுறுத்துகின்ற விதமான மற்றும் துஷ்பிரயோகமான விடயங்களை வெளியிடும் நபர்களுக்கு கடுமையான தண்டனைகளை அளிப்பது தொடர்பில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இப்போதுள்ள பரிந்துரைகள் சட்டமாக்கப்பட்டால், இப்படியான நபர்களை இரண்டு ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கமுடியும்.

இந்தக் குற்றத்துக்காக இப்போது அதிகபட்சமாக 6 மாதங்களே தண்டனை அளிக்கப்படுகின்றது.

பிரபல இணைய துஷ்பிரயோக சம்பவங்கள் பலவற்றின் தொடர்ச்சியாக அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாகாண சபையை தன்பக்கம் இழுக்க கொடையாளியாகியுள்ளார் ஜனாதிபதி

## ஜனாதிபதியின் பயணம் குறித்து வடக்கின் முதல்வர்

(மன்னார்)

நாஸ்கர் பதவியில் இருக்கும்வரை படையினர் தொடர்ந்து பலதை உங்கள் நன்மைக்காகச் செய்து வருவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு எமது வாக்குகள் வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முள்ளிக்குளம் தற்காலிக வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

முள்ளிக்குளம் பகுதியில் இருந்து கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த எம்மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று குடியேற முடியாத ஒரு நிலையை படையினர் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இவர்களின் பலகால வாழ விடங்களை விட்டு வெளியேற படையினர் மறுக்கின்றனர். எங்கு சென்றாலும் இப்பொழுது இராணுவ பிரசன்னத்தையும் அவர்கள் முகாம்களையும்தான் பார்க்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர் அரசாங்கத்தினர்.,



இரணைமடுக் குளத்தை அண்மையில் பார்வையிடச் சென்றேன். அங்கும் இராணுவம். சென்ற வாரம் ஈச்சிலவக்கை சென்றேன். அங்கும் இராணுவம். எங்கும் இராணுவம்.

இவர்கள் எம் மண்ணில் நீடித்து நிற்பதால் பல அவலங்களை நாம் எதிரநோக்கி வருகின்றோம்.

இங்கு 82 குடும்பங்களுக்கு ஒரு நடுத்தர வீடமைப்புத் திட்டத்தை வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. வீடுகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆனால் படையினர் இம் மக்களின் சொந்த இடங்களில் தொடர்ந்து குடிகொண்டிருப்பதால் மழை பெய்ய தொடங்கியுள்ள இந்தக் கால கட்டத்தில் என்ன செய்வது என்று நாங்கள் கலந்தாலோசித்து அவர்கள் வெளியே போகும் வரை எம் மக்களின் பாடு என்னவாகும் என்பதைக் கருத்தில் கொண்டு இப்பகுதியில் தற்காலிக கொட்டில்களிலும் குடிசைகளிலும் அவர்கள் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்து வருவதையும் பார்த்துத் தான் அவர்களின் நிம்மதியையும் பாதுகாப்பையும் உத்தேசித்து ஒரு தற்காலிக வீட்டுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம்.

இன்று நடைபெறுவது எமது நேரடி உதவிகள். சென்ற வாரம் எம் நிமிர்த்தம் மறைமுக உதவிகளை எமது மக்கள் பெற்றார்கள்.

நாம் பதவியில் இருப்பதால் நாங்கள் எதுவும் செய்யவில்லை. தாங்களே எல்லாவற்றையும் செய்ய வல்லவர்கள் என்பதை எடுத் துக் காட்ட பல காரியங்கள் நடந்தேறியுள்ளன.

வடமாகாண மக்களை எப்படியாவது தன்பக்கம் இழுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் ஜனாதிபதி தாராள சிந்தையுடைய கொடையாளியாக மாறியுள்ளார்.

புகையிரதப் பாதையை நிர்மாணித்துத் தந்தது இந்திய அரசாங்கம் என்றும் வன்னியின் வைத்தியசாலையை அமைத்துக் கொடுத்தவர்கள் பசுபிக் பிராந்திய அமெரிக்கக் கடற்படையினர் என்றும் எம்மக்களுக்கு தெரியும். சுயநலங் கருதியே சும்மா இருந்த ஜனாதிபதி சுறுசுறுப்பாக வடக்கு வந்து சுற்றுலா மேற்கொண்டு சென்றுள்ளார்.

நாம் பதவியில் இருப்பது எந்தளவுக்கு அரசாங்கத்தை நிலை குலைய வைத்துள்ளது என்பது இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நாம் வெறுமனே பதவியில் இருந்தாலே போதும். அரசாங்கம் உங்களுக்கு வாரித்தரும்.

படையினர் எதற்காக மக்களை வசீகரிக்கச் செயற்றிட்டங்கள் வகுத்துச் செயலாற்றுகின்றார்கள். அவர்களை வெளியேறுமாறு வடமாகாணசபை கேட்டுள்ளது. தாம் தொடர்ந்து இங்கு இருக்க வேண்டும் என்றால் எம் மக்களின் மனத்தைக் குளிர வைக்க வேண்டும்.

பலதைக் கொடுத்தும் பயம் காட்டியும் தேர்தலில் தமது பங்காளர்களை நிறுத்தியும் மக்கள் தங்களுக்கு வாக்களிக்காதபடியினால் எப்படியாவது எம் மக்கள் மனதை மாற்ற வேண்டும் என்று மானியங்களை வழங்கி வருகின்றார்கள் படையினர். ஏனென்றால் அவர்களுக்கு எமது வாக்குகள் வேண்டும்.

நாம் இருப்பதால் இங்கு புலர் செய்த ஊழல்கள் அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. நாம் 3 விதங்களில் எமக்கு வேண்டியவற்றைப் பெறலாம். ஒன்று வன்முறை. ஆனால் வன்முறை மேலும் வன்முறைக்கே வித்திடும். இரண்டு வலியச் சென்று சரணடைந்து எமது வாழ்வை விருத்தி செய்வது. என்றென்றும் இவ்வாறு நலன் பெறுபவர்கள் அடிமைகள் என்றே கணிக்கப்படுவார்கள்.

மூன்றாவது அப்பழுக்கற்ற கொள்கைகளை முன்வைத்து எமது தேவைகளைக் கூறிப் பெற எத்தனிப்பது. இது காலம் போகும். ஆனால் காலக் கிரமத்தில் நன்மை பயக்கும். நாம் இதைத்தான் செய்து வருகின்றோம்.

வன்முறையைக் கண்டித்துள்ளோம். வருந்தி அழைத்தாலும் எம்து வலுவான கொள்கைகளில் இருந்து வழுவாது எமது நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

ஆகவே வடமாகாணம் எந்த விதத்திலும் நன்மை பெறப்போவது நிச்சயமே. எமது வருங்காலம் நல்ல காலமாக அமையப் போவது நிச்சயமே என்று கூறினார். (அ-2)






வாழ்வின் எழுச்சி (திவிநெகும) தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 6 ஆவது கட்டம் நிறைவான இல்லம் வளமான தாயகம் எனும் தொனிப்பொருளில் நேற்று முற்பகல் 10.07 மணிக்கு நாடளாவிய ரீதியில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பெரியகுளம் கிராமத்திலும் மாங்குளத்தில் அமைந்துள்ள பனிக்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவிலும் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-தர்மபுரம், பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

## கல்நாட்டியகுளம் பிரதான வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா கல்நாட்டியகுளம் பிரதான வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவவுனியாவின்பழமை வாய்ந்த எல்லைக் கிராமமான கல்நாட்டியகுளம், வேப்பங்குளம் ஆகிய பகுதிகள் ஊடாக செல்கின்ற பிரதான வீதியாகும்.

இவ்வீதியானது வன்னி யுத்தம் முடிவுற்று ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரை புனரமைக்கப் படவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இப்பாதையூடாக தினமும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் போக்கு வரத்தை மேற்கொள்வதால் பாரிய இடர்பாடுகளை எதிர் கொள்வதாக கூறுகின்றனர்.

இது தொடர்பில் பல முறை பொது மக்களால் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மழைகாலம் அண்மித்துள்ள நிலையில் தமக்கான போக்குவரத்து பாதையை சீர்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-250)

## பைவர் கிளாஸ் பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

கைத்தொழில் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் பைவர் கிளாஸ் (கல்நார் தக்டு) பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இச்சபையின் உதவிப் பணிப்பாளர் செ.சசிகரன் அறிவித்துள்ளார். இப்பயிற்சி நெறிக்கு பழக விரும்புவோரும் தொழில் புரிவோரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பயிற்சிநெறி மூன்று நாட்கள் இலவசமாக நடை பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்களை எதிர் வரும் 24ஆம் திகதி வெள் ளிக் கிழமைக்கு முன்னதாக கிளிநொச்சியில் அமைந்துள்ள முன்னைய மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(அ-2-254)

## பிரதேச சபையின் அனுமதியின்றி வியாபாரத்தில் ஈடுபடக் கூடாது

### கரைச்சி பிரதேச சபை அறிவுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் வெளிமாவட்ட வியாபாரிகள் தெரு வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிர தேசசபை தவிசாளர் நா.வை. குகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு தங்கள் சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளனர்.

இதில் வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகள் வங்கிகளில் கடன்பெற்று நாளாந்தம் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இவர்களின் நலனை கருத்திற் கொண்டே குறித்த முடிவை கரைச்சி பிரதேசசபை எடுத்துள்ளது.

அத்துடன் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளிமாவட்டங்களில்இருந்துவருகை தரும் வியாபாரிகள் சபையின் அனுமதியின்றி தெருக்களில் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இதனால் அனுமதி பெற்று நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளின் வருமானம் குறைவடைந்து வருவதுடன் அவர்கள் பல்வேறு பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் கரைச்சி பிரதேச சபையினர் அனுமதியின்றி தெருக்களில் வியாபாரம் செய்பவர்களை கடந்த 18 ஆம் திகதி முதல் தடைசெய்துள்ளது.

அதனையும் மீறி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் பொருட்களை பிரதேச சபையினர் ஏற்றிச் செல்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின் அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.

- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ரணி(ல்)லை வில(க்)க சரியான சந்தர்ப்பம் இது!

பாரதப் போரில் கர்ணன் அருச்சுனனை நோக்கி நாகாஸ்திரத்தை தொடுத்து விடுகிறான். நாகாஸ்திரத்தில் இருந்து தப்புவது கடினமான காரியம் என்பதை உணர்ந்த கண்ண பரமாத்மா தான் ஓட்டிய தேரை நிலத்தில் புதையுமாறு செய்து நாகாஸ்திரத்தில் இருந்து அருச்சுனனைக் காப்பாற்றுகிறார்.

இச் சம்பவத்தை அறிந்த துரியோதனன் உடனடியாகவே சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சென்றிருக்க வேண்டும்.

பாண்டவர் பக்கம் கண்ணன் இருக்கும் வரை தனக்கு வெற்றியில்லை என்பதை துரியோதனன் உணரத் தவறியதன் விளைவாக கௌரவர் சேனை அழிவுறல் ஆயிற்று.

ஆக, கள நிலைமைகளை உணர்ந்து செயற்படுவது மிகமிக அவசியம் என்பதற்கு துரியோதனனின் நிலைமை நல்லதொரு எடுத்துக்காட்டு.

இப்போது நம்நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகம் அமைக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவதற்குத் தயாராகியுள்ளார்.

சட்டப்படி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறப்பட்ட போதிலும் அவர் போட்டியிடுவது முடிவாயிற்று.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாவிட்டால் அந்தக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டிடுவது யார் என்ற கேள்வி எழும். இந்தக் கேள்வி போதும் சகோதர உறவைச் சீர்குலைப்பதற்கு.

இராமருக்கு முடிசூட்ட நினைத்ததாலேயே தசரதன் உயிர் துறக்க வேண்டியதாயிற்று. தசரதனே தன் இறுதிக் காலம் வரை ஆட்சி செய்திருப்பானாயின் இராமர் 14 வருடம் காடு செல்லுதல் என்ற நிலைமை ஏற்பட்டிராது.

எனவே, ஆட்சி மாற்றத்தின் போதுதான் உறவுகள் உடைவு பெறுவதால் மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமை அதுவல்ல. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாராயின் தென்பகுதி முழுவதிலும் ரணிலுக்கு புலிச்சாயம் பூசப்படும். ரணில் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப்புலிகள் நிச்சயம் மீண்டும் தோன்றுவர் என்ற பிரசாரம் போதும் ரணில் கட்டுப்பணம் இழப்பதற்கு.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்கொள்ளக் கூடிய பலமான ஒருவரை தேர்தலில் நிறுத்துவது அவசியம். இதற்காக ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க தானாகவே விலகிக் கொடுப்பது. அல்லது ரணில் விக்கிரமசிங்கவை விலத்துவது. இதில் ஏதாவது ஒன்றை செய்வது உகந்தது.

எனினும் ரணில் விக்கிரமசிங்க தானாக விலகுவாராயின் விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய நீதிமன்றம் நீக்குவதற்கு ரணில் விக்கிரசிங்க காரணமாக இருந்தார் என்ற ஆளுந்தரப்பின் பிரசாரம் உண்மை என்று நம்பப்படும். இத்தகையதொரு நம்பிக்கை ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிடும் எந்த வேட்பாளரையும் பாதிக்கவே செய்யும்.

மாறாக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை போட்டியிட அனுமதிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறிக்கொண்டு, பொருத்தமான வேட்பாளரை தேர்தலில் நிறுத்துமாயின்; ஆளுந்தரப்பின் தேர்தல் பிரசாரத்தில் இருந்து பிராயச்சித்தம் பெறவும் முடியும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்துவதில்லை என்ற முடிவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆ... ...குழு எடுப்பது ஜனாதிபதித் ...தேர்தலை வெற்றி கொள்வதற்கான தந்திரோபாயமாக இருக்கும்.

# 79 மீனவர்கள் வெளிநாடுகளில் கைது

79 இலங்கை மீனவர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது. அவர்களின் 28 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

4 படகுகளுடன் 24 இலங்கை மீனவர்கள் கடந்த வாரம் பங்களாதேஷ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர. 24 மீனவர்களும் பங்களாதேஷ் கரையிலிருந்து 200 கடல்மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை விடுவிப்பது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து பங்களாதேஷில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திடம்வினவிய போது, வெளிவிவகார அமைச்சினால் உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்படுமாயின் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்படும என பதில் உயர்ஸ்தானிகர் ஏ.ஜி. அபேசேகர தெரிவித்தார். இருந்த போதிலும் உத்தியோகபூர்வ அறிவித்தல் இதுவரை தமக்கு கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கைது செய்யப்பட்டுள்ள 24 மீனவர்கள் இன்று பங்களாதேஷ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பங்களாதேஷில் உள்ள இலங்கைக்கான பதில் உயர்ஸ்தானிகர் ஏ.ஜீ.அபேசேகர தெரிவித்தார்.

இதேவேளை 3 படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் மியன்மாரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் எச்.ஆர். பியசிறி தெரிவித்தார்.

மேலும், இலங்கை மீனவர்கள் 40 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் 21 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரகத்தின் ஊடாக தமிழக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ)

# நோயாளருக்கு மாட்டிறைச்சி வழங்குவதைக் குறைக்கவும்

## சுகாதார அமைச்சு அறிவுரை

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவில் மாட்டிறைச்சி வழங்குவதைக் குறைக்குமாறு சுகாதார அமைச்சு அரச வைத்தியசாலைகளின் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவில் மாட்டிறைச்சி வழங்குவதைக் குறைத்து மாட்டிறைச்சியினால் கிடைக்கும் புரதத்தின் அளவிற்கு ஏற்ப புரதச் சத்துள்ள மாற்று உணவை அறிமுகப்படுத்துமாறும் அமைச்சு கேட்டுள்ளது.

இது தொடர்பாக அரச வைத்தியசாலைகளின் உயர் அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கான அறிவித்தல்கள் முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டுகிறது. இந்த நடைமுறையானது ஒரு சில அரச வைத்தியசாலைகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மாட்டிறைச்சி உண்பதை முடிந்தளவில் குறைத்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களை அறிவுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குடமுழுக்கு

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி சிவபுரம் அருள்மிகு சிவசுப்பிரமணியர் தேவஸ்தான திருக்குடமுழுக்கு நன்நீராட்டு சாந்திவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். இதற்கமைய இன்றையதினம் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி காலை சங்காபிஷேகமும் தீர்த்தமும் இடம்பெற்று மாலை திருக்கல்யாணம் இடம்பெறும்.

இத்தினங்களில் விஷேட சமய சொற்பொழிவு, அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், சமய அறிவுப்போட்டிகள் மற்றும் பரிசில்கள் வழங்கல், சிவஸ்ரீ.பா.கபிலனின் சமய நற்சிந்தனை கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அச்சுறுத்தல் விடுத்த நபர்களை கண்டறிய பல்கலையின் உதவி!

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரியவிற்கு அச்சுறுத்தல் விடுத்த சந்தேகநபர்களை அடையாளம் காண மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் இதற்கான அனுமதியை அளித்துள்ளது.

சிசிரிவி கமரா மூலம் பெறப்பட்ட சந்தேக நபர்களின் படங்களை அடையாளம் காண மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் உதவி அவசியம் என குற்றத் தடுப்புப் பிரிவினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரியவிற்கு அண்மைக் காலமாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாகன சாரதிகள் 12 பேருக்கு ஓர் இலட்சம் ரூபாய் அபராதம்

(முல்லைத்தீவு)

ஆவணங்கள் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய 12பேருக்கு ஓர் இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

இவர்களிடம் சோதனையிட்டபோது சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் என்பன இல்லை என்றும் மதுபோதையிலும் வாகனம் செலுத்தினர் என்றும் போக்குவரத்து பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து நீதிபதியால் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தி கலகம் விளைவித்தவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களை 2 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

# வறுமையினால் பாடசாலை செல்லாது தொழிலில் ஈடுபடும் மாணவர்கள்

## கிராம சிவில் அலுவலர்கள் சுட்டிக்காட்டு

பூநகரி முக்கொம்பன் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டாது விவசாயம் செய்யவும் வர்த்தக நிலையங்களுக்கும் பெற்றோர் வேலைக்கு அனுப்புவதாக கிராம சிவில் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பூநகரி பொலிஸார் பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராம மக்களுடனான சந்திப்பை அண்மையில் நடத்தியிருந்தனர். இதில் பெற்றோருக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுடன் மாணவர்கள் கல்வி கற்பதற்கு தடைகள் இருந்தால் அதனை தங்களிடம் தெரியப்படுத்துமாறும் அதற்கான தீர்வைத் தாம் பெற்றுத் தருவதாகவும் பொலிஸார் கூறினர்.

இதன்போது தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவைப்பதாக பெற்றோர் கூறினர்.

இதனைத் தொடர்ந்து கிராம சிவில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவ் அலுவலர்கள் மாணவர்கள் கல்வி கற்காது தொழிலில் ஈடுபட்டால் அவர்களது விபரங்களைத் திரட்டி பொலிஸாருக்கு வழங்குவார்கள்.

இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையிலும் பாடசாலையில் மாணவர்களின் வருகை குறைவாகவேயுள்ளதாகவும் இதற்கு குடும்ப வறுமையே காரணம் எனவும் கிராம சிவில் அலுவலர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. எனவே பெற்றோர் இதில் கூடிய கவனமெடுத்து தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அவர்களை கல்வி கற்பதற்கு பாடசாலைக்கு அனுப்பி வைக்கவேண்டுமென கேட்கப்படு கிறது. (அ-2-283)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அனுபவமே சிறந்த படிப்பு



- உனக்கு பிடித்ததைச் செய்ய விரும்புவது போல, மற்றவரும் விருப்பமானதைச் செய்ய சுதந்திரத்தை கொடு.
- உன்னிடத்தில் மறைந்திருக்கும் சக்தியை வெளிப்படுத்தும் செயலே புண்ணியம் என்பதை உணர்ந்து கொள்.
- அனுபவம் கற்றுத் தரும் படிப்பினையை விடச் சிறப்பான மதிப்பு வேறு எதற்கும் கிடையாது.
- மன உறுதி இருக்குமானால், போர்க்களத்தில் கூட ஆன்மீகப்பயிற்சி பெற முடியும்.
- ஆராய்ச்சி என்னும் வலைக்குள் கடவுள் ஒருபோதும் அகப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி சம்பியன்பட்டம் வென்றது இந்தியா



சுல்தான் ஜோஹர் கிண்ண ஹொக்கி போட்டியில் இங்கிலாந்தை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.

மலேசியாவில் நடந்த 4வது சுல்தான் ஜோஹர் கிண்ணத்திற்கான ஜுனியர் ஹொக்கி போட்டியில் நேற்று நடந்த இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இந்தியாவும், இங்கிலாந்தும் பலப்பரீட்சை நடத்தின.

முதல் பாதியில் இரு அணியினரும் எச்சரிக்கையுடன் ஆடியதால் கோல் எதுவும் விழவில்லை. 44 ஆவது நிமிடம் வரை இதே நிலையே தொடர்ந்தது.

இந்திய கோல் கீப்பர் அபினவ் பாண்டேவ், இங்கிலாந்தின் மூன்று கோல் வாய்ப்புகளை முறியடித்தார்.

45ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் கோல் பகுதியில் பந்தை காலால் தடுத்ததற்காக இந்தியாவுக்கு முதல் பனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது.

இதை இந்திய வீரர் ஹர்மன் பிரீத்சிங் லாவகமாக கோலாக மாற்றி அசத்தினார். இதைத் தொடர்ந்து 55வது நிமிடத்தில் இங்கிலாந்து பதில் கோல் திருப்பியது.

தங்களுக்கு கிடைத்த முதல் பனால்டி கார்னர் வாய்ப்பின் மூலம் இங்கிலாந்து வீரர் சாமுவேல் பிரெஞ்ச் கோல் அடித்து ஆட்டத்தை சமனுக்கு கொண்டு வந்தார்.

இங்கிலாந்தின் இன்னொரு வலுவான ஷாட்டை தடுத்த போது கோல் கீப்பர் அபினவ் பாண் டேவின் நெஞ்சில் காயம் ஏற்பட்டது.

இதனால் அவர் வெளியேற்றப்பட, கடைசி கட்டத்தில் அவருக்கு பதிலாக சுபோத் திர்கே கோல் கீப்பராக பணியாற்றினார்.

பரபரப்பான சூழலில் வெறும் 45 வினாடி மட்டுமே எஞ்சியிருந்த போது, இந்தியாவுக்கு பனால்டி கார்னர் சந்தர்ப்பம் கனிந்தது.

இந்த வாய்ப்பில் ஹர்மன்பிரீத் சிங் கோல் அடிக்க இந்தியா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தட்டிச் சென்றது.

லீக்கில் 5 ஆட்டங்களிலும் வெற்றி கண்ட இங்கிலாந்து சந்தித்த ஒரே தோல்வி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஆஸி அணியில் மீண்டும் வாட்சன்



அவுஸ்திரேலியா - தென் ஆபிரிக்கா அணிகள் இடையே 20 ஓவர் போட்டித் தொடர் (3 ஆட்டம்) வருகிற 5 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தப் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

வாட்சன், கேமரூன் ஒயிட், போலிஞ்சர் ஆகியோர் அணிக்கு மீண்டும திரும்பி உள்ளனர். புதுமுக விக்கெட் கீப்பர் பென்டாங் அணியில் இடம் பெற்றுள்ளார். அவர் சமீபத்தில் உள்ளூர் போட்டியில் 229 ரன்கள் குவித்து சாதனை புரிந்தார்.

**அவுஸ்திரேலிய அணி விபரம்:**

ஆரோன் பிஞ்ச் (கேப்டன்), வாட்சன், ஒயிட், ரிச்சர்ட்சன், ரியர்டன், மேடிசன், பல்க்னெர், பென்டாங், பென்கட்டிங், கும்மின்ஸ், கேமரூன் பாய்ஸ், அபோட், போலிஞ்சர். (க)

## தோழர்கள் விளையாட்டுக்கழக மென்பந்தாட்ட முடிபுகள்!



முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்தின்ஏற்பாட்டில்தோழர்கள் விளையாட்டுக்கழகத்தின் 21 ஆவது ஆண்டை முன்னிட்டு கிளி/முல்லை மாவட்டங்களுக்கு நடத்தப்படும் மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் விசுவமடு மகாவித்தியாலயத்தின் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதல் போட்டியில் விசுவமடு தோழர்கள் A அணியை எதிர்த்து விசுவமடு செந்தாமரை B அணிகள் மோதின. இதில் விசுவமடு தோழர்கள் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவது போட்டியில் தர்மபுரம் இளந்தாரகை அணியும் கிளிநொச்சி இளந்தென்றல் A அணியும் மோதின. இதில் கிளிநொச்சி இளந்தென்றல் A அணிவெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவது போட்டியில் விசுவமடு செந்தாமரை A அணியும் கிளிநொச்சி இளந்தென்றல் A அணியும் மோதின. இதில் கிளிநொச்சி இளந்தென்றல் B அணியினர்வெற்றி பெற்றுஅடுத்தசுற்றுக்குமுன்னேறினர்.

நான்காவது போட்டியில் விசுவமடு தோழர்கள் B அணியும் கிளிநொச்சி இளந்தென்றல் B அணியும் மோதின. இதில் கிளிநொச்சி இளந்தென்றல் B அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ஐந்தாவது போட்டியில் விசுவமடு புதிய சூரியன் அணியும் முரசுமோட்டைமுரசுஒளி அணியும்மோதின. இதில் விசுவமடு புதியசூரியன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

## இந்திய அணி புதிய சாதனை



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4 ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா 300 ஓட்டங்களுக்கு மேல் அடித்தது மூலம் புதிய சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டியில் 300 ஓட்டங்களை கடந்த இந்திய அணி இது வரை 80 முறை 300 ஓட்டங்களை கடந்துள்ளது.

மேலும் சர்வதேச போட்டிகளில் அதிகம் முறை 300 ஓட்டங்களுக்கும் மேல் அடித்த ஒரே அணி என்ற பெருமையையும் பெற்றுள்ளது. இருப்பினும் 300 ஓட்டங்களுக்கு மேல் அடித்த போட்டிகளில் வெற்றி விகிதம் பார்த்தால் குறைவாகவேயுள்ளது.

அதாவது இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து அணிகள் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தும் வெற்றி விகிதத்தில் குறைவாக உள்ள அணிகளாகும்.

இதுவரை 24 முறை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 300 ஓட்டங்களுக்கு மேல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால்ஒருமுறை கூட இந்த இலக்குகளை அந்த அணி வெற்றிகரமாகத் துரத்தியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## விளையாட்டுச் செய்திகள்


### தீபாவளியை முன்னிட்டு தடகளப் போட்டி

தீபாவளிப் பண்டிகையை முன் னிட்டு கோப்பாய் கண்ணகையம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விளையாட்டுக் கழகத் தலைவர் ப.லுசாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம். ஆர். மோகனதாஸ் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ச.வேலழகன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்குப் பிரிவுச் செயலாளர் இ.மயில்வாகனம் மற்றும் முன்னாள் விளையாட்டுக் கழக உறுப்பினர் கோ.சடகோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது காலை 6 மணிக்கு 5 மைல் தூர மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறும். (க-134)

## பளுதூக்கல் போட்டி; யாழ்.இந்துவிற்கு பதக்கங்கள்



அண்மையில் Srilanka Weight Lifiting federation இனால் பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற Novices Champion Ships-2014 போட்டியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு 8 பதக்கங்கள் கிடைத்துள்ளது.

புத்தகங்கள் விபரம் வருமாறு,

18 வயது ஆண்களுக்கான பளுதூக்கலில் 94 Kg எடைப்பிரிவில்சபிதன் முதலாமிடம், 50Kg எடைப்பிரிவில் அபிநயன் இரண்டாமிடம், 45Kg எடைப்பிரிவில் திர்சாத் மூன்றாமிடம், 85Kg எடைப்பிரிவில் [illegible] இன்பராஜ் மூன்றாமிடம்.

20 வயது ஆண்களுக்கான பளுதூக்குதலில 85Kg எடைப்பிரிவில் [illegible] மிடம், 62Kg எடைப்பிரிவில் சரண் [illegible] Kg எடைப்பிரிவில் சிறிகௌதமன் இரண்டாமிடம், 77Kg எடைப்பிரிவில் இந்துஜன் மூன்றாமிடம். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ1000 பெறுமதியான 104 போலித்தாள்கள்

கொழும்பு காலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில் ஆயிரம் ரூபாய போலி நாணயத்தாள்கள் 104 ஐ கண்டெடுத்த அந்த பேருந்தின்நடத்துநர், அவற்றை காலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

எஸ் 60,303,244 இலக்கங்களுடைய போலி நாணயத்தாள்கள் 84 ஆம், எஸ் 86, 83,100,5 இலக்கங்களுடைய போலி நாணயத்தாள்கள் 20ம் வைத்து சுற்றப்பட்டி ருந்த, உரிமையாளர் இல்லாத பொதியையே நடத்துநர் பொலிஸில் ஒப்படைத்துள்ளார். (இ-5)

## ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலயம் இலங்.விசேட குழு அனுப்ப தயார்

இலங்கையில் எதிர் காலததில் நடைபெறவுள்ள தேசிய தேர்தலை கண்காணிக்க விசேட குழுவொன்றை அனுப்ப தயார் நிலையில் இருப்பதாக ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலயம் தெரிவித்துள்ளது.

அதன்படி 30 பேர் கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்ப தயார் என ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலயம் அறிவித்துள்ளது.


இதேவேளை, இதுகுறித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (இ-5)

# சமாதானம், ஒற்றுமையுடன் கூடிய இணக்கப்பாடே எமக்கு வேண்டும்

### ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஆனந்தசங்கரி

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, புலம்பெயர்ந்த மக்களும் பிரவினை கோருவதையும் தமிழீழம் அமைப்பதையும் கைவிடுவார்களேயானால் தாங்களும் நிறைவேற்று அதிகார முறையை கைவிட தயாராக இருப்பதாக தெரிவித்தமையானது நாட்டிலுள்ள பல்லின மக்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது எனவும் எமக்கு வேண்டியது சமாதானம், ஒற்றுமையுடன் கூடிய இணக்கப்பாடு என தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.**



தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் புலம் பெயர்ந்தமக்களும் பிரிவினை கோருவதையும், தமிழீழம் அமைப்பதையும் கைவிடுவார்களேயானால் தாங்களும் நிறைவேற்று அதிகாரமுறைமையை கைவிடதயாராக இருப்பதாக தெரிவித்தமையானது நாட்டிலுள்ள பல்லினமக்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால ஆதிக்கம் செலுத்துகின்ற புலம்பெயர்ந்தவர்களும் அவர்களில் தங்கியிருந்து செயற்படுகின்றதமிழ் தேசிய கூட்டமைப்பும் இதற்கு சம்மதிக்கத் தயங்குவார்கள். எது எப்பிடியிருப்பினும் தங்களின் கூற்று உறுதியாக இருக்குமானால் இந்நாட்டின்பல்வேறுபிரச்சினைகளைதீர்ப்பதற்கு சாதகமான சூழ்நிலைமையைஉருவாக்க பலர்தயாராகவே உள் ளனர்.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற சில சம்பவங்களை நினைவூட்ட வேண்டுமானால்தமிழ்தேசிய கூட்டமைப்புக்கோ புலம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினருக்கோ இப்பிரச்சினையில தலையிடுவதற்கு அருகதையுண்டா இல்லையா என்பதை உங்களால்கண்டு பிடிக்கமுடியும்

எவரும் தமது சொந்த தேவைக்காகநாட்டின் சரித்திரத்தை மாற்றியமைக்க கூடாது. எல்லாப் பிரச்சினைகளிலும் பார்க்கநாட்டின் முக்கியபிரச்சினை முதலிடம் வகிக்கட்டும். 1970 ஆம்ஆணடு சிறிமாவோபண்டாரநாயக்கா அம்மையாரைபிரதமராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்காசமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன மூன்றும் இணைந்து ஐக்கிய முன்னணி அரசாங் கத்தை அமைத்தன. தாங்கள் பெலியத்ததொகுதியிலி ருந்தும் நான் கிளிநொச்சியிலிருந்தும் தெரிவானோம். அப்போது ஆகக்குறைந்த 24 வயதுடைய இளம்பாராளுமன்ற உறுப்பினராக இருந்தீர்கள் என்பதை ஞாபகமூட்ட விரும்புகின்றேன். அப்போது உருவாக்கப்பட்ட குடியரசு அரசியல் சாசனத்தை அமுல்படுத்துவதில் அன்றைய அரசு அவசரம் காட்டிவிட்டது என் பதே எனது கருத்தாகும். முறையாக சிந்திக்காமையினால் பழைய சோல் பரி அரசியல் சாசனத்தில் இடம்பெற் றிருந்த 29 ஆவது பிரிவில் அடங்கியிருந்த அம்சங்கள் புதியசாசனத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சேர்க்கப்பட் டிருந்தால் நாடு எதிர் நோக்கிய மகிழ்ச்சி தராத நிலைமை உருவாகியிருக்காது.

அதன் விளைவு தமிழரசு கட்சியின் ஸ்தாபகர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவாகளின் கட்சியும் அகில இலங்கைதமிழ் காங்கிரஸ் மூத்த தலைவர் ஜி.ஜி. .பொன்னம்பலம் அவர்களுடைய கட்சியும் ஏறத்தாழ இணைந்து கொண்டன. 1977 ஆம்ஆண்டு இலங்கை தமிழரசு கட்சியின ஸ்தாபகர் தமிழர் விடுதலைக கூட்டணியின் தலைவராகவே காலமானார். தமிழரசு கட்சியை மீளபுதுப்பிக்கும் எண்ணம் அவருக்குகடுகளவும் இருக்கவில்லை. அதற்குஆதாரமாக ஜி.ஜி. பொன்னம்பலம்,எஸ். தொண்டமான் ஆகியஇருவரையும் இணைத் தலைவராக தனது தலைவர் பதவியோடு இணைத்துக் கொண்டார்.

ஜனாதிபதி அவர்களே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சரித்திரம் மிக நீளமானது. ஆனால் அவற்றை மிகவும் சுருக்கமாக முடிந்தளவு பல விடயங்களை தங்கள் முன் வைக்கிறேன். தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட் டமைப்பு ஆகிய இரு அமைப்புக்களும் நேர்மையான முறையில் புனரமைப்பு செய் யப்பட வில்லை. நான் இந்நாட்டு மக்கள் மீது அக்கறை கொணடவனாக இருக்கிறேன். எமது மக்கள் எதுவித இன வேறுபாடின்றி சகோதர சகோதரிகளாக வாழ வேண்டும்என்பதே எனதுஅவா.

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாகவும், தமிழ் தேசிய தலைமையாகவும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதாக பிரகடனப்படுத்தியிருந்தார்கள்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சனை சம்பந்தமாக பேசி ஓர் உடன்பாட்டுக்கு வருவது சம்பந்தமாக பல்வேறுகட்சிகளின் தலைவர்களை கூட்டிஒன்றுகூடல் வைப்பதற்குஆரம்பநடவடிக்கையாக சிலதலைவர்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளேன்.

பெரியகட்சிகளுடன்இணைந்து செயற்படும் சிறுகட்சிகள் இப்பணியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குமெனஎதிர்பார்க்கின்றோம். நாம் ஒற்றை மயாக ஏகோபித்த முடிவெடுத்தபின் நேரில் சென்று வன்முறையையும் பிரிவினையையும் கைவிடுமாறு பல்வேறுகட்சிகளுக்குஅழுத்தம் கொடுப்பதோடுசமாதானமாகவும் ஒற்றுமை யாகவும், அமைதியாகவும் வாழக் கூடியவொருநாட்டை உருவாக்கி அதில் சகலரும் சமவுரிமையோடு வாழவழிவ குப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சொர்க்கம் என்பது... சுத்தம் உள்ள வீடுதான்!

வீட்டின் சுகாதாரம் என்பது குடும்ப ஆரோக்கியத்தின் கண்ணாடி ஆகும். தனமும் குளிப்பது இரண்டு வேளை பல் தேய்ப்பது இதுவே சுகாதாரம் எனநம்மில் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இவை தவிர வீட்டில் அலுவலகத்தில் நம் கவனத்துக்கு வராமல் ஏராளமான கிருமிகள் நம்மைப் பின்தொடர்ந்து கொணடேதான் இருக்கின்றன. அவற்றில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள கொஞ்சம் கவனம் எடுக்க வேண்டும்.

இந்தியாவில் மோசமான சுகாதாரப் பழக்கங்களின் விளைவாக செலவழியும் தொகை மட்டுமே ஆண்டுக்கு 17 ஆயிரம் கோடி ரூபா என்பதை உணர்ந்தாலே கவனம்எடுக்க வேணடிய தன் அவசியம் புரியும்.

**அன்றாடப் பொருட்களில் அபாயம்!**

தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி என்பவற்றில் தூசியை நீக்கத் தெரிநத நமக்கு அதன் ரிமோட்களில் உள்ள தூசி கண்ணுக்குத் தெரிவதில்லை. சாப்பிட்ட கையோடும்தலையில் எண்ணெய் தட வின கையோடும் பயன்படுத்துபவர்கள் பலர். வீட்டில் தவழும் குழந்தை இருந்து அது ரிமோட்டைத் தன் வாயில் வைத்தால் வயிற்றுப்போக்கு உடனே ஏற்படுவது நிச்சயம்.

சுவரில் ஒட்டடை அடிக்கும்போது விசிறி அலுமாரிகள் என்பவற்றை நாம் கவனிக்காமல் விட்டுவிடுவோம். இதில் பரவியிருக்கும் தூசியால் தும்மல், இருமல் கண் எரிச்சல் போன்றவை ஏற்படும். தூசியின் அடர்த்தியைப் பொறுத்து ஆஸ்துமா நுரையீரல் பாதிப்பையும் அழைத்து வந்து விடும்.



அடுத்து பெண்கள் அன்றாடம் பாவிக்கும் அழகு சாதனப் பொருட்களாகிய லிப்ஸ்டிக், மஸ்காரா, காஜல், ஐப்ரோ பென்சில் என ஒரே மேக்கப் சாதனங்களை வீட்டில் உள்ள அனைவரும் பயன்படுத்தினால் ஒருவருக்கு இருக்கும் சருமப் பிரச்சினைகளை மற்றவர்கள் இலவசமாகப் பெற வழிவகுத்துவிடும்.

**கிருமிகளின் சொந்த வீடு மலசலகூடம்!**

கழிப்பறையை வைத்தே ஒரு வீட்டின் சுகாதாரத்தைத் தெரிந்துகொள்ளலாம். இன்று பெரும்பாலான வீடுகளில் [illegible] பயன்படுத்தப்படுகின்றன.

மூட்டு வலிக்காரர்களுக்கு இது வசதியாக இருந்தாலும் இந்தியன் டைப் மலசலகூடங்களை விட இதில் கிருமித் தொற்று அதிகம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. காற்றில் பரவக்கூடிய சி.டிபிஷில், ஈ-கோலை ஸ்ட்ரெப்டோகாக்கஸ் ஸ்டாஃபிலோகாக்கஸ் ஷிஜெல்லா (C.dif ficile, E-coli, streptococcus staphylococcus, shi- gella) போன்ற கிருமிகள் ஒருவர் மலசலகூடங்களை பயன்படுததிச் சென்ற அடுத்த ஒன்றரை மணி நேரத்துக்கு பிறகும் அங்கே பரவியிருக்கும் [illegible] ஆய்வாளர்கள். [illegible] இந்தக் கிருமிகள் ஃ

## மருத்துவ உலகம்

Health Care

உங்கள் நலம் உங்கள் கைகளில்

ப்ளஷ் செய்தவுடன் 10 அடி வரை உயரத்தில் பரப்பப்பட்டு காற்றில் கலக்கும். கழிப்பறையில் பயன்படுத்தப்படும் சோப், ஷாம்பூ, பிரஷ், பக்கெட், மக், கைப்பிடி, குழாய் என அனைத்திலும் இந்தக் கிருமிகள் பரவியிருக்கும். வயிற்றுப் போக்கு வாந்திக்கான காரணத்தை வீட்டின் மலசலகூடத்தில் தேடினால் போதுமானது. கிருமி நாசினியால் மலசலகூடத்தின தரை, சுவர், வாஷ்பேசின்களை அடிக்கடி சுத்தம செய்வது ஒன்றே கிருமிகளை வெளியேற்ற ஒரே வழி.

**டூத் பிரஷ்"க்கு தனி இடம்**

குளியலறையில் வைக்கப்பட்டுள்ள டூத் பிரஷில் மட்டும் சராசரியாக 10 மில்லியன கிருமிகள் குடும்பம் நடத்துவதாகச் சொல்கிறது.

மான்செஸ்டர் பல்கலைக் கழகம். நமது வாயில் உள்ள பக்றீரியாக்களின் இனங்கள் மட்டுமே 200 வரை இருக்கும். அதை சுத்தம் செய்த பின்பு பிரஷை ஸ்டாண்டில் வைத்து விடுகிறோம். கழுவு வதற்கு பயன்படுத்தும் கழிவறையின் கிருமிகளை பிரஷ் காந்தம் போல இழுத்துத் தன் வசம் வைத் துக்கொள்கி றது. சிலர்பிரஷை ஈரத்துடன பிளாஸ்டிக் மூடியைக் கொண்டு மூடி வைப்பதால் பூஞ்சை படர்வதற்கும் வாய்ப்பு உண்டு. ஒரு பிரஷ்ஸ்டாண்டில் குடும்பத்தினர் அனைவரின் பிரஷ்களும் வைக்கப்படுவதால் ஒரு பிரஷ்ஷிலிருந்து மற்றவற்றுக்கும் கிருமிகள் பரவும்ஒருவருக்குஉடல்நிலை சரியில்லாமல் இருந்தால் அடுத்தவருக்கு அந்த நோய பரவுவதற் கான காரணங்களில் இதுவும் ஒன்று.

**சமயலறை "காலன்'**

கழிப்பறைக்கு அடுத்தபடியாக கிருமிகள் அதிகம் வசிப்பது சமையல் அறையில்தான். சமைக்காத இறைச்சியிலிருந்து வரும்ஈ.கோலை மற்றும் சால்மோனெல்லா (Salmonella) கிருமிகள் கழுவும்போது ஸிங்க்கிலோ பாத்திரங்களிலோ ஸ்கிரப்பிலோ ஒட்டிக்கொண்டிருக்கும். எப்போதும் ஈரமாகவே இருப் பதால் இந்தக் கிருமிகள் வாழ்வதற்கு ஏற்ற இடம் ஸிங்க்?. இங்கிருந்து பாத்திரங்களுக்கு இவை எளிதாக இடம்பெயர்ந்து விடுகின்றன.

இறைச்சி வெட்டும் கத்தியை வைத்து காய்கறி வெட்டுவது, பழங்களை வெட்டுவது, கத்தியைக் கழுவாமலே தொடர்ந்து உபயோகிப்பது எல்லாமே அபாயம்தான்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**வரலாறு** **ஒரு மணித்தியாலம்**

## பகுதி I
### அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதுடன் அதன் அடையாளங்களையும் ஆங்காங்கே காணமுடியும். அதனை மறந்து செயற்படுவது அத்திபாரமின்றி கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு ஒப்பானதாகும்.' இவ்வாறு கூறியவர்.

   1. G.H.கார் 2. ஜவஹர்லால் நேரு
   3. G.H.ட்ரெவிலியன் 4. அரிஸ்டோட்டல்

2. புராதன காலத்தில் இலங்கை புகழ் பெற்ற வர்த்தக மத்திய நிலையமாக இருந்ததாக குறிப்பிடும் நூலாவது.
   1. அரிஸ்டோட்டலின் டி முண்டோ என்ற நூல்
   2. கொஸ்மசின் டொபோ கிறபியா கிறிஸ்டியானா என்ற நூல்
   3. புரோகோபியபஸ்சின் பாரசீக யுத்தம் என்ற நூல்
   4. பிளினியின் நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா என்ற நூல்

3. எழுத்து மூல மூலாதாரங்கள் இல்லாத தொல்பொருளியல் சான்றுகளை மட்டும் அடிப்படையாக கொண்டு உருவாகிய வரலாற்றுக்குரிய காலத்தை குறிப்பிடுவது.
   1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்று
   2. புராதன வரலாற்றுக் காலம் என்று
   3. ஆதி மனிதனின் வரலாற்றுக் காலம் என்று
   4. தொல்பொருளியல் வரலாற்றுக் காலம் என்று

4. 'அ' நிரல் மற்றும் 'ஆ' நிரல்களை சரியாக இணைக்கும் போது வரவேண்டிய விடையை தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. பண்டுகாபய மன்னர் | a. நாட்டை ஒருகுடையின்கீழ்கொண்டுவந்த ஆட்சியாளன் |
| 2. தேவ நம்பியதீச மன்னர் | b. பாதுகாப்புக்காக மலைநாட்டுக்கு தப்பிச் சென்றார். |
| 3. துட்டகைமுனு மன்னர் | c. முதல்முறையாக மகாவலி நதியைச் சார்ந்த குடியேற்றங்களின் ஆட்சியைக் கைப்பற்றினார். |
| 4. வலகம்பா மன்னர் | d. மௌரிய பேரரசுடன் நல்லுறவைப் பேணினார். |
| | e. ஜேதவனவிகாரையைஅமைத்துதானமாககையளித்தார். |

**1. c,d,e,b 2. d,a,b.e 3. e,b,a,c 4. c,d,a,b**

5. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிக்கு கேட்கக் கிடைத்திராத சம்பவத்தை தெரிவு செய்க.
   1. 1ஆம் விஜயபாகு மன்னர் மகாநாககூலயில் இருந்து 3 திசைகளால் படையைத் திரட்டி சோழர்களிடமிருந்து பொலனறுவையை மீட்டார்.
   2. 5ஆம் மகிந்த மன்னனின் ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்கள் வரி செலுத்துவதை தவிர்த்து செயற்பட்டார்கள்.
   3. நிஸங்க மல்ல மன்னர் களனியிலும் மகியங்கனையிலும் இருந்த பௌத்த சமய ஸ்தலங்களை வழிபாடு செய்யச் சென்றார்.
   4. முகலன் இளவரசர் இந்தியப் படையினரின் உதவியுடன் காசியப்ப மன்னரை தோல்வியடையச் செய்தார்.

6. பிழையான கூற்றை தெரிவு செய்க
   1. தப்போவ வாவிக்கு தெதுறு ஓயாவில் இருந்து நீர் பெற்றுக் கொள்ளப்படும்.
   2. மகாவலி நதியில் இருந்து மினிப்பே கால்வாய்க்கு நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.
   3. அங்கமடில்லையில் அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.
   4. கால்வாய்கள் அமைக்கும் போது சிறு குளங்கள் ஊடாக நீர் எடுத்துச் செல்லப் படுகிறது.

7. கோண நதி, வனநதி, கப்பகந்தர நதி, ஜஜ்ஜிர நதி ஆகிய நதிகளுக்கு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பெயர்களை முறையே எழுதியுள்ள விடையாவது.
   1. கலா ஓயா, தெதுரு ஓயா, மாணிக்க கங்கை, வளவை கங்கை
   2. கலா ஓயா, வளவை கங்கை, மாணிக்க கங்கை, தெதுரு ஓயா
   3. வளவ கங்கை, கலா ஓயா, தெதுரு ஓயா, மாணிக்க கங்கை
   4. மாணிக்க கங்கை, வளவ கங்கை, தெதுரு ஓயா, கலா ஓயா

8. மகாவம்சத்திற்கமைய முதலாவது தென்னிந்திய ஆக்கிரமிப்பு நடைபெற்ற போது இலங்கையின் ஆட்சியாளராக இருந்தவர்.

   1. அசேலன் 2. வலகம்பா 3. 1ஆம் சேனன் 4. சூரதிஸ்ஸ

9. a) பிக்குகளின் ஒழுக்கவிதிகள் தொடர்பாக தம்பதெனிய கதிக்காவத்தையை நெறிப்படுத்தல்
   b) யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளராக சப்புமல் இளவரசரை நியமித்தல்
   c) ஜாதகக்கதைப் புத்தகத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்தல்
   d) வத்தல் விஜயபாகு விகாரையை அமைத்தல்.
   ஆகியசம்பவங்களைமுறையேஒழுங்குபடுத்தினால்கிடைக்கும்விடையைதெரிவு செய்க.

**1. d,a,c,b 2. a,c,d.b 3. d,a,b,c 4. c,d,b,a**

10. இராச்சியங்கள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த பின்னர் இலங்கை இந்தியாவில் இருந்து பட்டாடைகளை இறக்குமதி செய்ததாகவும் அவற்றை விற்பனை செய்வதற்கு உள்நாட்டுக் கடை வீதிகள் இருந்ததாகவும் குறிப்பிடப்படும் மூலாதாரமாவது.
    1. மகாவம்சம் 2. குருணாகலை விபரம் எனும் ஏடு
    3. நிகாய சங்கிராய 4. பன்சிய பனஸ் ஜாதக புத்தகம்

11. யாழ்ப்பாண வைபவ மாலை மற்றும் செகராச சேகரமாலை ஆகிய நூல்களின் தகவல்களைப் பெறக் கூடிய இராச்சியமாவது.
    1. கோட்டை இராச்சியம் 2. தம்பதெனிய இராச்சியம்
    3. யாழ்ப்பாண இராச்சியம் 4. கம்பளை இராச்சியம்

12. சிங்கள தமிழ் மக்களுக்கிடையே சமாதானமிக்க தொடர்பை வைத்துக் கொண்டு நாட்டு மக்களுக்கிடையே பிரபலமாக இருந்த யாழ்ப்பாண பிராந்திய ஆட்சியாளனாவது.
    1. விஜய குலங்கை 2. குலசேகர ஆரியன் 3. சிங்கை ஆரியன் 4. வரோதயன்

13. வரலாற்று ரீதியாக கீழ்வரும் சம்பவங்கள் இடம்பெற்ற ஒழுங்குகளைக் காட்டும் விடையாவது
    a. மியூரன் ஆணைக்குழுவை நியமித்தல்
    b. கண்டி மகுல்மடுவையில் றொபார்ட் பிரவுண்றிக்கிற்கும் சிங்கள பிரதானிகளுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடல்
    c. முல்லேரியா போரில் போர்த்துக்கேயர்கள் தோல்வியடைதல்.
    d. தர்மபால மன்னர் தனக்குப் பின் அன்பளிப்பு உறுதிப் பத்திரம் மூலம் போர்த்துக்கேயர்களுக்கு கோட்டை இராச்சியத்தை ஒப்படைத்தல்.
    e. லோரன்ஸ் சோ டி அல்மேடா உட்பட்ட குழுவினர் இலங்கைக்கு காலி துறைமுகத்தினூடாக வருகை தரல்.

**1. e,c,d,a,b 2. e,d,c,b,a 3. d,e,c,b,a 4. c,a,b,d,e**

14. 1. தனது மகளின் புதல்வரான தர்மபால இளவரசருக்கு கல்வியைப் பெற்றுக் கொடுக்க போர்த்துக்கேய மதகுருமாரிடம் ஒப்படைக்கப்பட்டமை.
    2. எப்போதும் தனது சகோதரரைப் பற்றிய பயத்துடன் இருந்தார்.
    3. போர்த்துக்கேயருக்கும் இம்மன்னனுக்கும் இடையே இருந்த தொடர்பு கோட்டை மற்றும் சீதாவாக்கை இராச்சியங்களுக்கிடையே இருந்த பகையுணர்வை அதிகரிக்க ஏதுவாக இருந்தது.
    4. போர்த்துக்கேயர்கள் தனது சகோதரரை கொலை செய்யுமாறு வழங்கிய ஆலோசனையை இவ்வரசர் மறுத்தார்.
    5. இளம் தர்மபால இளவரசர் ஆட்சிக்கு வந்தது இவ்வரசர் போர்த்துக்கேயர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்த பின்னரே.
    இந்த அனைத்து சம்பவங்களையும் சேகரித்து நீங்கள் ஒரு சுயசரிதை எழுதினால் அதைப் பெயரிடுவது கீழ்வரும் எந்த மன்னரின் பெயரில்.

    1. 1ம் புவனேகபாகு மன்னர். 2. 7ம் புவனேகபாகு மன்னர்
    3. 2ம் புவனேகபாகு மன்னர். 4. 4ம் புவனேகபாகு மன்னர்

15. தம்பதெனிய இராச்சிய காலத்தின் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு பயன்மிக்க பல நூல்கள் எழுதப்பட்டன. அவ்வாறு தம்பதெனிய இராச்சியத்தில் எழுதப்பட்ட நூல்கள் உள்ளடங்கும் விடையை தெரிவு செய்க.
    1. விசுத்தி மார்க்க சன்னச, காவியசேகர, அமாவதுர, புத்சரண
    2. கவிசிலுமின, பூஜாவலிய, குத்திலகாவிய, அமாவதுர
    3. விசுத்தி மார்க்க சன்னச, கவிசிலுமின, சதர்மரத்னாவலிய, பூஜாவலிய.
    4. அமாவதுர, கவிசிலுமின, சதர்மரத்னாவலிய, குத்தில காவிய

16. கீழ்வரும் அம்சங்களுள் வெளிநாட்டவர்களின் தாக்கத்தினால் இலங்கை சமூகத்துடன் தொடர்புபட்ட அம்சங்கள் மட்டும் அடங்கும் விடையை தெரிவு செய்க.
    a) இராஜகாரிய முறை d) இஸ்லாமிய சட்டம்
    b) உரோமன் கத்தோலிக்க சமயம் e) போக்குவரத்து கட்டமைப்பு
    c) வங்கி முறைமை f) அத்தம் முறை

**1. b,c,d 2. c,b,f 3. a,b,c 4. b,c,e**

17. ஒல்லாந்து ஒரேஞ் 5ஆம் வில்லியம் இளவரசரால் அனுப்பப்பட்ட கியூ கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
    1. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்கள் கைப்பற்றுவதை எதிர்த்தல்.
    2. ஒல்லாந்தர்களுக்கு மலையகப் பிரதேசத்தை கட்டாயம் வழங்க வேண்டும் என்பது.
    3. இலங்கையின் ஒல்லாந்த பிரதேசங்கள் பிரான்சியர்கள் கைப்பற்றுவதை தடுப்பதற்காக பிரித்தானியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது.
    4. ஆங்கிலேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்கள் சமாதானமாக இலங்கையை ஆட்சி செய்ய வேண்டும் என்பது.

18. இலங்கையை ஆட்சி செய்கையில் ஆங்கில ஆட்சியாளர்கள் கையாண்ட தந்திரமிக்க ஆட்சி முறையாவது.
    1. இனபேதம், மதபேதம், குலபேதம் போன்றவற்றை மக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தல்.
    2. அனைத்து நபர்களிடமிருந்தும் நியாயமான ரீதியில் வரி அறவிடல்.
    3. அனைத்து மதங்களையும் சமமாக மதித்தல்.
    4. காலத்திற்கு காலம் பொருத்தமான அரசியலமைப்பு யாப்புக்களை நடைமுறைப் படுத்தியமை.

19. தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற பயிரினங்களின் வளர்ச்சிக்காக இலங்கையில் அமைத்த ஆராய்ச்சி நிலையங்களை முறையே காட்டும் விடையை தெரிவு செய்க.
    1. அகலவத்தை, தலவாக்கலை, லுனுவில
    2. தலவாக்கலை, லுனுவில, அகலவத்தை
    3. லுனுவில, அகலவத்தை, தலவாக்கலை
    4. தலவாக்கலை, அகலவத்தை, லுனுவில

20. கீழே தரப்பட்டுள்ள 'அ' மற்றும் 'ஆ' நிரல்களை இணைத்து சரியான விடையை தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மீகெட்டுவத்த குணாநந்த தேரர் | a. வித்தியோதய பிரிவெனாவை அமைத்தல் |
| 2. வலானே சித்தார்த்த தேரர் | b. வித்தியாலங்கார பிரிவெனாவை அமைத்தல் |
| 3. ரத்மலான தர்மாலோக தேரர் | c. பஞ்சமா விவாதங்களை நடாத்துதல் |
| 4. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் | d. பரம தம்ம சைத்திய பிரிவெனாவை அமைத்தல் |
| | c. ஆங்கிலகொடியை கீழே இட்டு மிதித்தல் |

**1. c,d,e,a 2. e,b,c.a 3. a,c,e,b 4. c,d,b,a**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




101

...தொடரையும் 2-0 என்று கைப்பற்றி இருக்கலாம். சச்சின் நியூசிலாந்தை ஏன் ஃபாலோ ஆன் செய்யச் சொல்லவில்லை என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வியாகப் பூதாகரமாக எழுந்தது. ஒருவேளை மேட்ச் ஃபிக்சிங் சூதாட்டமாக இருக்குமோ என சி.பி.ஐ. விசாரணையும் முடுக்கி விடப்பட்டது. சச்சின் யதார்த்தமாக எடுத்த ஒரு முடிபிற்கு வேண்டாதவர்கள் கண், காது, மூக்கு வைத்து பிரச்சினையை ஊதி ஊதி வளர்த்ததை பின்னாளில்தான் சச்சின் உணர்ந்துகொண்டார். சச்சின் மற்றும் கபில் ஆகியோரை விசாரித்த சி.பி.ஐ. இறுதியில் இருவரையும் குற்றமற்றவர்கள் என்று முடிபு செய்து 2001 ஆம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

மூன்று டெஸ்ட் போட்டிகளில் சச்[சின்] சராசரி 100 சதவீதத்திற்கும் அதிகம். நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் 1-0 மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் 3-2 என்ற கணக்கில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளை இந்தியா வென்றது. இருப்பினும் பழுத்த மரம் கல்லடி படும் என்பதுபோல் இவ்வளவு சாதனைகளுக்கு நடுவே திருஷ்டிப் பொட்டாக நடந்த சி.பி.ஐ விசாரணை சச்சினை சங்கடப்படுத்தியது. முதன்முறையாக இரட்டை சதம் மற்றும் ஒருநாள் போட்டி போட்டிகளில் சதங்களால் சதாய்த்த சச்சின், அடுத்து நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளில் சதங்களால் சதாய்த்தார். ஐதராபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் சச்சின் 186 ரன்கள் எடுத்து ஒருநாள் போட்டியில் அதிக ரன்கள் எடுத்த இந்தியர் என்ற பெருமையையும் உலகளவில் நான்காமவர் என்ற பெருமையையும் தட்டிச் சென்றார். 3-2 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை இந்தியா வென்றது.

> ❦❦❦❦❦❦❦❦❦❦❦❦
> இப்படி ஒரு விபரீதமான உட்கருத்து இருக்கும் என்பதைக் கனவிலும் நினைக்காத சச்சின் அதற்காக ரொம்பவே நொந்து போனார். தன் மீது ஒரே நேரத்தில் பூக்களும் கற்களும் வீசப்பட்டதை எண்ணி சச்சின் சிரித்துக் கொண்டே அழுதார்.
> ❦❦❦❦❦❦❦❦❦❦❦❦

## சிரித்துக் கொண்டே அழுதார்!



நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் 1-0 மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் 3-2 என்ற கணக்கில் யில் அதிக ரன் எடுத்த இந்தியர் என்ற சாதனைகளைப் புரிந்து சந்தோஷப்பட்ட அதேநேரம் யதார்த்தமாக எடுத்த ஒரு முடிபிற்கு இப்படி ஒரு விபரீதமான உட்கருத்து இருக்கும் என்பதைக் கனவிலும் நினைக்காத சச்சின் அதற்காக ரொம்பவே நொந்துபோனார். தன்மீது ஒரே நேரத்தில் பூக்களும் கற்களும் வீசப்பட்டதை எண்ணி சச்சின் சிரித்துக் கொண்டே அழுதார்.

ஆஸ்திரேலிய பயணத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாராகிக் கொண்டிருந்தது. அணியின் கேப்டனாக சச்சின் மற்றும் பயிற்சியாளர் கபில்தேவ் இருவரும் இணைந்து கிரிக்கெட் வாரியத்தின் ஆளுமையை எதிர்க்க முடிபு செய்தனர். ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் இந்திய அணியில் திறமையானவர்கள் இடம்பெற வேண்டும். அந்த வகையில் கேப்டன் என்ற முறையில் தனக்கும் பயிற்சியாளர் என்ற முறையில் கபில்தேவுக்கும் திறமையானவர்களைத் தேர்வு செய்ய உரிமை வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். தன்னைவிட ஜூனியர் ஒருவரின் கீழ் விளையாடுவதா என்று அசார் சரியாக விளையாடவில்லை. இது சச்சினுக்கும் தெரியும். காலப்போக்கில் இந்த வருத்தம் சரியாகப் போய்விடும் என்று சச்சின் எதிர்பார்த்தார். ஆனால், சச்சின் கேப்டனாக இருக்கும் வரையில் நான் சரியாக விளையாட மாட்டேன் என்று முடிவெடுத்ததுபோல் தொடர்ந்து எல்லா ஆட்டங்களிலும் அசார் படு மோசமாக விளையாடினார். சச்சின் இது குறித்து ஜாடை மாடையாகவும் ஒரு சில சமயம் நேரடியாகவும் அசாரைக் கேட்டுவிட்டார். ஆனால், அவர் மாறுவதாக இல்லை. எனவே, அசாரை மீண்டும் அணியில் சேர்ப்பது என்பது சோற்றுப் பொட்டலத்தில் பெருச்சாளியை வைத்துக் கட்டுவதுபோல் என்றுணர்ந்த சச்சினும் கபில்தேவும் கிரிக்கெட் வாரியத்துடன் அசார் அணியில் இடம்பெறக்கூடாது என்று தெளிவுபடக் கூறியிருந்தனர். அதேபோல் மோங்கியா ஆட்டமும் பல போட்டிகளில் படுகேவலமாக இருந்தது. மோங்கியா ஆடும் டெஸ்ட் லட்சணத்திற்கு யாராவது ஐந்தாம் வகுப்பு மாணவனை அனுப்பலாம் என்று பத்திரிக்கைகள் கிண்டலடித்து எழுதி இருந்தன.

(தொடரும்)

கே. ரமேஷ்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...பிறகு இறுதியான மதம் உங்களிடம் வேர்விடத் தொடங்கும். அது நன்றியுணர்வு மற்றும் அன்பின் மதமாகும்.

நன்றியுணர்வும் அன்பும் நெருங்கிய தொடர்புடையது. நீங்கள் நன்றியுணர்வை உங்கள் இருப்புத் தன்மையின் அடிப்பகுதியில் அனுபவபூர்வமாக உணரும்பொழுது, உங்களிடம் அன்பைத் தவிர வேறெதுவும் இருக்காது. உண்மையான அன்பை உணர்வதற்கான முதல்படி, நன்றியுணர்வை உணர்வது. உங்கள் அமைப்பில் மனநிறைவின்மை இருக்கும்வரை உண்மையான அன்பு இருக்க முடியாது. நன்றியுணர்வும் அன்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே செல்லும். கடைசி சக்கரமான ஸஹஸ்ரார சக்கரத்தைப் பற்றிப் பேசும்பொழுது நாம் நன்றியுணர்வைப் பற்றி நிறைய பேசுவோம்.

நான் இவற்றையெல்லாம் மக்களிடம் சொல்லும்பொழுது அவர்கள் சொல்கிறார்கள், ஸ்வாமிஜி, நான் உலகம் முழுவதையும் நேசிக்கிறேன் ஸ்வாமிஜி. நான் ஒரு சின்ன எறும்புக்குக் கூட தீங்கு செய்வதில்லை... என்று.

இவற்றையெல்லாம் சொல்லி உங்களை நீங்களே ஏன் ஏமாற்றிக் கொள்ள விரும்புகிறீர்கள்? உங்களால் உங்கள் அண்டை வீட்டாரை முழு மனதுடன் நேசிக்க முடியுமா? நான் சொல்கிறேன்... முழு உலகையும் நேசிக்கிறேன் என்



பது போன்ற விடயங்களைச் சொல்வது மக்களுக்கு வெகு சுலபம். ஏனெனில், அதை நிரூபிப்பதற்கு, உணர முடிந்த வகையில் அவர்கள் எதையும் செய்யத் தேவையில்லை!

உலகை நேசிப்பதாகச் சொல்லிக் கொண்டு, அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கலாம்? அதைக் காண்பிப்பதற்காக அவர்கள் எதையும் தனிப்பட்ட விதத்தில் செய்ய வேண்டியதில்லை! ஏனெனில் உலகம் என்பது உணர முடியாத பொருள்; இது உருவமற்றது. அதற்கு ஒரு தெளிவான அடையாளம் இல்லை.

ஆனால், நீங்கள் உங்கள் அண்டை வீட்டுக்காரரை நேசிக்கிறேன் என்று சொல்லும் பொழுது பிரச்சினை ஆரம்பமாகிவிடுகிறது! நீங்கள் தினமும் அவரது முகத்தைக் காண வேண்டும். நீங்கள் அவரை நேசிப்பதை ஏதேனும் உணரக் கூடிய வகையில் செய்து நிரூபிக்க வேண்டும்! அப்பொழுது அது

### ஆன்மீகம் 51

ஒரு பிரச்சினையாகிவிடுகிறது!


ஒரு எறும்புக்கு எதுவும் தீங்கு விளைவிக்காததனால், நீங்கள் எவ்வாறு சிறப்பாக உணர முடியும்? எறும்பால் உங்களுக்கோ அல்லது உங்கள் உடைமைக்கோ ஏதேனும் ஊறு விளைவிக்க முடியுமா? அதனால் நீங்கள் அதனை நேசிப்பதை சோதிக்கத்தான் முடியுமா? அது கண்ணுக்குத் தெரிவது கூட இல்லை. அதைப் பற்றி நீங்கள் என்னிடம் பேசுகிறீர்கள். அது நகைப்புக்குரியதாக இல்லை? ஒரு எறும்புக்குக்கூட கெடுதல் செய்வது பற்றி நினைப்பதுகூட இல்லை என்று உரிமை கோருகிறீர்கள்!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாய மனிதன் க்ரிஃபின்!

சுட்டி




## 10.2014 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1520 - பேர்டினண்ட் மகெலன் சிலியில் புதிய நீரிணை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகெலன நீரிணை எனப் பெயர்பெற்றது.
- 1805 - ட்ரபல்கார் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள, பிரெஞ்சு, மற்றும் ஸ்பானியக் கூட்டுப்படைகளின் கடற்படையை வென்றன. இவ்வெற்றி பிரிததானியக் கடற்படையை 20 ஆம் நூற்றாண்டு வரை இப்பிராநதியத்தின் பெரும் கடற்படை வல்லரசாக ஆக்கியது.
- 1805 - ஊலம் என்ற இடத்தில் ஆஸ்திரியா நெப்போலியனின் பெரும் இராணுவத்திடம் சரணடைந்தது. நெப்போலியன் 30,000 பேரைச் சிறைப்பிடித்தான்.
- 1824 - ஜோசப் ஆஸ்ப்டின் போர்ட்லண்ட் சிமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1837 - அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஒசியோலா கைது செய்யப்பட்டான்.
- 1854 - புளோரன்ஸ் நைட்டிங்கேல் மற்றும் 38 தாதிகள் கிரிமியன் போர்முனைக்கு அனுப்பப்பட்டனர்.
- 1876 - யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவியது.
- 1879 - தோமஸ் எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது.
- 1892 - உலக கொலம்பியக் கண்காட்சி சிக்காகோவில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. ஆனாலும், கட்டட வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் இக கண்காட்சி 1893, மே 1 ஆம் நாளிலேயே பொது மக்களின் பார்வைக்குத் திறக்கப்பட்டது.
- 1895 - ஜப்பானியப் படைகளின் முற்றுகையினால் போர் மோசா குடியரசு வீழ்ந்தது.
- 1945 - பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1969 - சோமாலியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.
- 2003 - குறுங்கோள் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1833 - அல்பிரட் நோபல், சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர், நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ 1896)
- 1925 - சுர்ஜித் சிங் பர்னாலா, இந்திய அரசியல்வாதி

### இறப்புகள்

- 1835 - முத்துசுவாமி தீட்சிதர், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி. 1776)





(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2014 - 16.11.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை மறுகணமே நிறைவேற்றும் சிம்ம இராசி நேயர்களே!**

**சிந்தித்து செயற்பட வேண்டிய நேரம்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்று வலிமை இழக்கிறார். எனவே, திடீர் திடீரென மாற்றங்களும், திகைக்க வைக்கும் சம்பவங்களும் நடைபெறலாம். மனோபலம் பெற்ற நீங்கள் சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிகரத்தைத் தொடும் வாய்ப்பு வரும் மாதத்தில் உள்ளது.

6 இறகு அதிபதி உச்சம் பெறும் இந்த நேரம் எதிரிகளின் பலம் மேலோங்கி நிற்கலாம். இல்லத்தில் உள்ளவர்களின் போக்கை புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். சுக்ரப் பெயர்ச்சிக்கு பின்னால் தடைகளை வென்று படிப்படியாக முன்னேற்றம் காணப் போகிறீர்கள்.

செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருப்பது யோகம்தான். ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாடிய நிலை மாறி வளர்ச்சி நிலை மேலோங்கும். பொதுவாக தனாதிபதி உச்சம் பெற்றுத் தொடங்கும் இம்மாதத்தில் தனவரவு தாராளமாக வந்து சேரும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிக்கும் விதத்தில் போதுமான வருமானம் இருக்கும்.

8 இல் கேது 2 இல் ராகு இருப்பது அவ்வளவு நல்லதல்ல. சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் ஜாதகம் அமைந்துள்ளது. எனவே, ஏற்ற இறக்கமான வாழ்க்கை அமையும். மற்றவர்களை நம்பி செய்யும் காரியங்களில் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். எனவே, யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை முறையாக செயற்படும் என்பதால் எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. சனியால் சஞ்சலங்களும், சந்தோஷக் கேடுகளும், வழக்கு வியாஜ்ஜியங்களும் வராமலிருக்க ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகும் சுக்ரன்!**

அக்டோபர் 20 ஆம் திகதி துலாம் ராசிக்கு சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை நீச்சத்திலிருந்த சுக்ரன் இப்பொழுது வலிமை அடைகிறார். சகாய ஸ்தானாதிபதி சகாய ஸ்தானத்திலேயே பலன் பெறுவதால் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தடைகளைத் தகர்த்தெறிவீர்கள். எதிரிகளின் பலம் குறையும். எண்ணிய சம்பவங்கள் இனி நடக்கப் போகின்றன. இழந்தவை மீண்டும் பெறும் வாய்ப்பு கைகூடி வரும். அதே நேரத்தில் 6இற்கு அதிபதி சனியும் பலம் இழக்கிறார். எனவே, தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

தன லாபாதிபதியான புதன், சுக்ரன், சூரியன், சனியோடு நவம்பர் 2 ஆம் திகதியன்று சேருகிறார். இந்த கூட்டுக்கிரக யோகம் மிக உன்னதமான யோகமாகும். கூட்டாளிகளால் லாபம் கிடைக்கும். பொதுவாழ்வில் புகழ் கூடும். புதிய திருப்பங்கள் ஏற்படும். இழந்தவைகளை மீண்டும் பெறும் வாய்ப்பு உண்டு.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

ராசியில் சுக்ரன் நவம்பர் 13 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். வெற்றிகள் ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்கும் சுக்ரன் சுகஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நம்பிக்கைக்குரியவர்கள் உங்கள் நண்பர்களாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாடும், ஆறுமுகப் பெருமான் வழிபாடும் நன்மைகளை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்:**

இம்மாதம் எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டிய மாதமாகும். தனாதிபதி புதன் உச்சம் பெற்றிருப்பதால் வருமானம் போதுமானதாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும்.

குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயத்தைப் பெற முடியும். உச்சம் பெற்ற குரு விபரீத ராஜயோகத்தை உருவாக்குவதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கலாம்.

# தடைகளை வென்று படிப்படியாக முன்னேற்றம் காணப்போகிறீர்கள்

பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் திடீர் திருப்பங்கள் பலவும் சந்திக்க நேரிடும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ராகு-கேது பிரீதிகளை முறையாகச் செய்வது நல்லது.

(செய்து கொள்வது நல்லது. அனுகூலமான ஸ்தலத்தை சுய ஜாதக ரீதியாக தேர்ந்தெடுத்து சர்ப்ப பரிகாரம் செய்வதோடும் ராகு புதன் வீட்டில் இருப்பதால் புதன்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

டிசம்பர் 16 இல் அர்த்தாஷ்டம சனி வரப் போகிறது. அது மூன்று மாதம் முன்னதாகவே

# சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அர்த்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**பூமி வாங்கும் யோகம் ஏற்படும் நேரம்!**

**பாசத்தோடு பேசி பலரின் நேசத்தையும் பெறும் கன்னி இராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் புதன் உச்சம் பெற்று உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அதோடு ஏழரைச் சனியின் ஆதிக்கமும் கொஞ்சம் வலிமை குறைய ஆரம்பித்திருக்கிறது. சனி விலகிச் செல்ல ஆயத்தம் செய்யும் இந்த நேரத்தில், கும்பிட்ட தெய்வங்கள் மூலம் இனி ஏராளமான வரங்கள் கிடைக்கப் போகின்றன.

நம்பிக்கையோடு காத்திருந்த உங்களுக்கு இன்னும் இரண்டு மாதங்களில் நலமும், வளமும் விரும்பியபடியே கிடைக்கப் போகிறது. என்னயிருந்தாலும், மிகப்பெரிய கிரகமான சனி ஜாதகத்தில் தாரா பலம் பெற்ற நட்சத்திரக் காலில் இருந்தால் விலகுவதற்கு முன்னதாகவே அற்புதப் பலன்களை அள்ளி வழங்கி விட்டுச் செல்லும். பட்ட துன்பங்கள் மாறவும், பரிதவிப்புத் தீரவும், கெட்ட சகவாசங்கள் விலகவும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கவும், யோகம் தரும் சனி வீற்றிருக்கும் ஆலயங்களில் உங்களுக்கு உகந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

பொதுவாக வாக்கு ஸ்தானத்தில் சூரியனும், சனியும் இருப்பதால் எதையும் கொஞ்சம் யோசித்துச் செய்வது நல்லது. வாக்குக் கொடுத்து விட்டுப் பிறகு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். அதே நேரத்தில் சப்தமாதிபதி 11 இல் சஞ்சரிப்பதால் அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். சிலருக்கு தூரதேசப் பயணங்களால் தொழில் வளர்ச்சி கூடும். பொதுவாக லாபாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் வருமானம் எந்த ரூபத்திலும் வந்து கொண்டேயிருக்கும்.

போட்டிக்கடை விரித்தோர் விலகுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மகிழ்ச்சி இல்லத்தில குடிகொள்ளும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. வீடு வாங்க வேண்டுமென்று விரும்பியவர்களுக்கும், தோட்டம் வாங்க வேண்டுமென்று விரும்பியவர்களுக்கும் அது நிறைவேறும். ஜென்மத்தில் ராகு, 7 இல் கேது இருப்பதால், யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வது நல்லது.

**துலாம் ராசியில் சுக்ரனின் சஞ்சாரம்!**

அக்டோபர் 20 ஆம் திகதி தனது சொந்த வீடான துலாத்தில் சுக்ரன் அடியெடுத்து வைக்கப் போகிறார். அங்கு நீச்சம் பெற்ற சூரியனோடு இணைவதால் நீச்ச பங்க ராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே, ஆச்சரியப்படத்தக்க விதத்தில் படிப்படியாக அனைத்துக் காரியங்களும் நடைபெறும். உத்தி யோகத்தில் இருந்தபடியே தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சனியும் இதே திகதியில் வலிமையிழக்கிறார். எனவே, பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவு உண்டு.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 2 ஆம் திகதியிலேயே துலாம் ராசியிலேயே புதனும் வந்து இணையப் போகிறார். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் இக்காலத்தில் புதிய திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். பொருளாதார நிலை உயரும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசியில் சுக்ரன் நவம்பர் 13 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். எனவே, குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிறர் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று நினைப்பீர்கள். குடும்பத்தில் சமாதான கொடி பறக்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். இம்மாதம் சண்முக நாதப் பெருமான் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்:**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்போடு உரிய நேரத்தில் காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

பூர்வீக சொத்துக் களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு தீரும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானம் வந்து சேரும். சூரிய, சனி சேர்க்கைக்குரிய பரிகாரங்களையும், சர்ப்ப சாந்திகளையும் செய்தால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும்.

# நீங்கள் ஆச்சரியப்படும் விதமாகவே அனைத்துக் காரியங்களும் நடைபெறும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபாசிசமும் ஊழலும் இரட்டைப் பிறவிகள்!

நாடாளுமன்ற ஜனநாயக நாடுகளின் பேரவையின் 131 ஆவது கூட்டம் சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரமான ஜெனீவாவில் நடைபெற்றபோது இந்தியாவின் சார்பில் மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் தலைமையில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுதீப் பந்தோபாத்யாயா, தீவிரவாதத்தால் ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக தீவிரவாதம் விளங்குகிறது எனக் கூறுவது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

உள்கட்சி ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துள்ள கட்சிகளும், அக்கட்சிகளின் சர்வாதிகாரத் தலைவர்களுமே நாட்டின் ஜனநாயகத்திற்கு அறைகூவலாக விளங்குகிறார்கள்.

நாட்டின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேரு ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்கு பெரு முயற்சி செய்தார். தனது கட்சியிலும் அரசியலிலும் ஜனநாயகம் வளர்ந்தோங்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

நேருவின் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் கீழிருந்து மேல்வரை முறையான தேர்தல்கள் நடைபெற்றன.

நேருவின் ஆதரவுபெற்ற கிருபளானியை எதிர்த்து புருசோத்தமதாஸ் தாண்டன் வெற்றி பெற்றார் என்பது வரலாறு.

ஜனநாயகத்தின் மீது நேருவுக்கு அளவு கடந்த நம்பிக்கை இருந்தது. அதனால்தான் தனக்குப் பின்னால் யார் தலைமை தாங்குவார் என்பது குறித்து அவர் இறுதிவரை எதுவும் சொல்லவில்லை.

சாடையாகக்கூட குறிப்பிடவில்லை. நாட்டில் உள்ள ஜனநாயக அமைப்புகளை கட்டி வளர்த்ததில் அவருடைய பங்கு மகத்தானது.

தனது மறைவுக்குப் பின் சரியான தலைவரை தேர்ந்தெடுக்க காங்கிரஸ் கட்சி தவறுமானால் அதற்கு வழிகாட்டியாக இருந்த தானே பொறுப்பாக நேரிடும் என்பதை உணர்ந்து மிகக் கவனமாகச் செயற்பட்டார்.

அவரின் இந்த எச்சரிக்கை உணர்வு காங்கிரஸ் கட்சியில் ஜனநாயகப் பண்புகளை வளர்த்தது.

மத்திய காங்கிரஸ் தலைமை எவ்வளவு செல்வாக்கோடும் திறமையோடும் இருந்தாலும் அக்கட்சியை உயிர்ப்புடன் வைப்பதற்கு அது உதவாது எனக் கருதினார்.

எனவே, காங்கிரஸ் கட்சிக்கும் மக்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக மாநிலங்களில் பல தலைவர்கள் பரவலாக உருவாக வேண்டும் என அவர் கருதினார்.

தனக்குப்பின் எதிர்காலத்தில் ஒரு கூட்டுத் தலைமை நாட்டிற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் வழிகாட்ட வேண்டும் என அவர் விரும்பினார்.

தனது காலத்திலேயே காங்கிரஸ் தலைவராக காமராசரைத் தேர்ந்தெடுக்கச் செய்தார்.

நேருவின் விருப்பத்தை காமராசர் நிறைவேற்றினார்.

நேருவின் மறைவிற்குப் பிறகு பிரதமராக லால் பகதூர் சாஸ்திரியையும், அவரின் மறைவிற்குப் பிறகு பிரதமராக இந்திரா காந்தியையும் ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்க காமராசருக்கு துணை நின்றது மாநில முதல்வர்களும் மாநில காங்கிரஸ் தலைவர்களுமே.

"நேரு போன்ற மாபெரும் தலைவரின் இடத்தை வேறு யாரும் நிறைவு செய்ய முடியாது.

கூட்டுத் தலைமைதான் அதை நிறைவு செய்யும். இதை மனதில் வைத்துக்கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும" என காமராசர் காங்கிரஸ்காரர்களை வேண்டிக் கொண்டார்.

ஆனால், 1969 ஆம் ஆண்டிற்குப் பிறகு கூட்டுத் தலைமையை விரும்பாத பிரதமர் இந்திரா காந்தி காங்கிரசின் பிளவுக்குக் காரணமானார்.

அதன் விளைவாக காங்கிரஸ் கட்சி பலவீனம் அடைந்தது. அவர் தலைமையில் உருவான புதிய காங்கிரசில் ஜனநாயகத்திற்கு இடமில்லாமல் சர்வாதிகாரம் கொடி கட்டிப் பறந்தது. சர்வாதிகார நோய் மற்ற கட்சிகளுக்கும் பரவியது.

இன்று இந்தியாவில் அனேகமாக அனைத்துக் கட்சிகளிலும் உள்கட்சி ஜனநாயகம் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது.

அனைத்துக் கட்சிகளிலும் சர்வாதிகாரத் தலைவர்களின் கை ஓங்கியுள்ளது.

இடதுசாரி மற்றும் முற்போக்குக் கட்சிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

பயங்கரவாதத்தைவிட சர்வாதிகாரம் மிகமிக மோசமானது. வெறுக்கத்தக்கது.

ஜனநாயகத்தின் ஆணிவேரையே அது அறுத்தெரிந்துவிடும்.

நாட்டில் ஜனநாயகம் வலிமையாக இல்லையென்றால் அதிகார வர்க்கத்தின் கை ஓங்கும். சர்வாதிகாரத் தலைமை அதிகாரவர்க்கத்தை நம்பியே செயற்படும்.

ஏனென்றால், தாங்கள் செய்யும் ஊழல் நடவடிக்கைகளுக்கு அதிகாரவர்க்கத்தின் ஆதரவும், பாதுகாப்பும் தேவை. எனவே, மொத்தத்தில் நிர்வாகமே ஊழல்மயமாக மாறும்.

அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

அதிகார வர்க்கம் தவறு செய்யுமானால் அதற்கு சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான நாடாளுமன்ற மரபாகும்.

ஆனால், சர்வாதிகார ஆட்சியில் நாடாளுமன்றம் பொம்மை மன்றமாகவே விளங்கும். எனவே, அதிகாரவர்க்கத்தின் கை மேலோங்கும்.

பிரதமரோ அல்லது முதலமைச்சரோ மக்கள் செல்வாக்கைப் பெற்றவராகவும் தனது கட்சியைக் கட்டுப்படுத்தும் வலிமை பெற்றவராகவும் இருந்து தனது அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தால், அதிகாரிகள் அமைச்சர்களுக்கு கட்டுப்படுவார்கள்.


ஆனால், இந்தியாவில் இப்போது பல மாநிலங்களில் முதலமைச்சர்கள் அமைச்சர்களை ஒதுக்கிவிட்டு நேரடியாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி செயற்படுகிறார்கள்.

இந்த சர்வாதிகாரப்போக்கு அதிகார வர்க்கத்தின் தான்தோன்றித்தனத்தை அதிகரித்துவிட்டது.

இந்தத் தவறுகள் நாளுக்குநாள் பெருகுவதற்கு கட்சியிலும் ஆட்சியிலும் ஜனநாயகம் அழிக்கப்பட்டதுதான் காரணமாகும்.

காங்கிரஸ் கட்சிக்கு சோனியா முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அல்ல.

தலைவராக தன்னைத்தானே அறிவித்துக் கொண்டவர். இப்போது தனது மகனை ராகுலை துணைத் தலைவராக்கி இருக்கிறார்.




பிரதமராக இருந்த மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் ஆட்சியிருந்த மாநிலங்களின் முதல்வர்கள் ஆகிய அனைவரையுமே சோனியா ஆட்டிப்படைத்தார் என்பது நாடறிந்த உண்மையாகும்.

2ஜி ஊழல், நிலக்கரிச் சுரங்க ஊழல் ஆகியவற்றை விசாரணை செய்த முன்னாள் தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி வினோத்ராய் இந்த ஊழல்கள் நடைபெறுவது அனைத்தும் பிரதமராக இருந்த மன்மோகன்சிங்கிற்கு நன்கு தெரியும்.

ஆனால், அவரால் அவற்றைத் தடுக்க முடியாத நிலையில் இருந்தார் என்று கூறியதன் மூலம் பிரதமருக்கு மேலான அதிகார நிலையில் இருந்த சோனியாவை நோக்கித்தான் குற்றம்சாட்டும் விரல் நீளுகிறது.

தேசியவாத காங்கிரசின் தலைவர் சரத்பவார் தனது மகளை தன்க்குப் பின் தலைவராக வளர்த்து வருகிறார்.

ஊழல் வழக்கில் சிறை சென்ற லாலு பிரசாத் தனது மனைவியையே முதலமைச்சராக்கினார்.

முலாயம் சிங் யாதவ் தனது மகன் அகிலேஷ் யாதவை முதலமைச்சர் நாற்காலியில் அமர வைத்து அழகு பார்க்கிறார.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது மகன் ஸ்டாலினை வாரிசாக உருவாக்கி வைத்திருக்கிறார். அவரது மற்றொரு மகன் அழகிரியும் மகள் கனிமொழியும் அதிகாரப் போட்டியில் நிற்கிறார்கள்.

பஞ்சாப், ஹரியாணா, ஒடிசா போன்ற மாநிலங்களில் உள்ள மாநிலக் கட்சிகள் எதிலும் ஜனநாயகம் இல்லை. சர்வாதிகார முறை, வாரிசு முறையும்தான் உள்ளன.

பயங்கரவாதத்தைவிட வாரிசு அரசியல் முறை, ஜனநாயகத்தை ஆழக் குழித்தோண்டிப் புதைக்கும். சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும். தங்கு தடையில்லாத சர்வாதிகாரம் ஃபாசிசமாக வடிவெடுக்கும்.

கிட்லரும், முசோலினியும் இப்படித்தான் சர்வாதிகாரிகளாக உருவாகி ஃபாசிச ஆட்சி நடத்தினார்கள். இதன் விளைவாக உலகம் இரண்டாம் உலகப்போரை சந்திக்க நேர்ந்து பேரழிவிற்கு ஆளாகியது.

அதைப்போல இப்போதும் இந்தியாவில் சிறுசிறு ஃபாசிசத் தலைவர்கள் உருவாகி வருகிறார்கள். இவர்களின் ஆட்சியில் ஊழலும் இலஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன. மக்களின் ஜனநாயக உரிமைகள் அடியோடு பறிக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியினரின் குரல்வளையை நெரிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

"ஜனநாயக உரிமைகளுக்கான சங்கம" என்ற அமைப்பு இந்தியாவில் மத்திய அமைச்சர்களில் 27 சதவீதத்தினரும், மாநில அமைச்சர்களில் 23 சதவீதத்தினரும் கிரிமினல் வழக்குகளில் சிக்கியிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சிகரமான உண்மையை வெளியிட்டிருக்கிறது.

நாட்டின் இயற்கை கனிமங்கள், வன வளங்கள் ஆகியவை சூறையாட அனுமதிக்கப்படுகின்றன. தங்களுக்குக் கிடைக்கும் கையூட்டுப் பணத்திற்காக மக்களின் சொத்துகள் கொள்ளையடிக்கப்படுவதற்கு அரசுகள் துணைநிற்கின்றன.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், பன்னாட்டுத் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்குத் தேவையான விளைநிலங்கள் விவசாயிகளிடமிருந்து அடிமாட்டு விலைக்குப் பறிக்கப்பட்டு அன்னியப் பெருமுதலாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.


பன்னாட்டுத் தொழிற்சாலைகளுக்குத் தங்கு தடையில்லாத மின்சாரம், தண்ணீர் ஆகியவை வழங்கப்படுகின்றன. இத்தொழிறசாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சங்கம் அமைக்கும் ஜனநாயக உரிமை இல்லை.

ஃபாசிசமும் ஊழலும் இரட்டைப் பிறவிகளாகும். இந்தியாவில் வளர்ந்து வரும் ஃபாசிசக் கட்சிகள் நாட்டின் ஜனநாயகத்தை அடியோடு ஒழித்துக்கட்டிவிடும் என்பதை எவ்வளவு விரைவாக நாம் உணர்கிறோமோ அவ்வளவு விரைவாக நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்படும்.

-பழ. நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்காலிக சலுகையின் அடிப்படையில் வரவு செலவு திட்டம் சமர்ப்பிப்பு- ரணில்



ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் தற்காலிக சலுகையின் அடிப்படையில் இம் முறை வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளது. ஆகையால் அரசின் இந்த வித்தைகளுக்கு ஏமாறாது விழிப்புடன் மக்கள் இருக்க வேண்டும் என ஐ.தே.க. வின் தேசிய தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதில் பயனில்லை. மக்களின் வருமானமே அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கமைய ஐ.தே.கட்சி ஆட்சி பீடமேறினால் மக்களின் வருமானம் அதிகரிப்பதற்கான பொருளாதார கொள்கையை கொண்டு வருவோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

கோட்டை தேர்தல் தொகுதி தேர்தல் பணி அதிகாரிகளை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் நவீன தொழில்நுட்ப துறை சார்ந்த அபிவிருத்தியே தேவையாகும். எனினும் எமது ஆட்சியின் போது நாட்டின் சம்பிரதாய பூர்வமான பொருளாதாரத்துடன் நவீன தொழில்நுட்பத்தை கட்டியெழுப்புவோம்.

அத்தோடு தற்போது அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க ஆர்வம் காட்டி வருகிறது. உலக சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவதும் அதிகரிப்பதும் சகஜமாகும். எனினும் நாட்டின் பொருளாதாரத்திற்கு அத்தியாவசிய பொருட களின் விலை குறைவதில் பயனில்லை. மாறாக மக்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய ஐ.தே.க. ஆட்சி பீடமேறுமானால் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவதுடன் ஓய்வூதியர்களின் கொடுப்பனவை 2500 ரூபாவாக அதிகரிக்க செய்வோம்.

மேலும் பெற்றோல், டீசல், மின் கட்டணம் என அனைத்தினதும் செலவீனம் குறைப்போம். இதற்கு அப்பால் அமைச்சரவையின் எண்ணிக்கையை குறைத்து மிஹின் லங்கா போன்ற நட்டத்தில் இயங்க கூடிய நிறுவனங்களை நிறுத்தி ஊழலை முற்றாக ஒழித்து வரி அறவிட வேண்டியவர்களிடம் வரி அறவிட்டு புதியதொரு நாட்டை கட்டியெழுப்புவோம்.

எனவே ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் இம் முறை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவு திட்டத்தில் தற்காலிகமாக பல்வேறு சலுகைகளை வழங்கவுள்ளது.

எனவே இவற்றிற்கெல்லாம் மக்கள் ஏமாறக்கூடாது. இருப்பினும் அரசின் தற்காலிக சலுகைகள் அனைத்தையும் முழுமையாக மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கூட்டமைப்பின் முயற்சிகளுக்கு ஹக்கீம் துணை போகமாட்டார்

## நம்பிக்கையுடன் விமல்

தமிழ் மக்களைப் போல் முஸ்லிம்களையும் ஏமாற்றி வடக்கு-கிழக்கு இணைந்த புதிய அத்தியாயமொன்றினை ஆரம்பிக்கவே கூட்டமைப்பினர் முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுசேர முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிக்கு ஹக்கீம் துணை போகமாட்டார் என நம்பிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் விமல் வீரவன்ச, புலிகள் மீதான தடை நீக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமே மகிழ்ச்சியினை கொடுத்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

தேசிய சுதந்திர முன்னணியால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சரும் அக்கட்சியின் தலைவருமான விமல் வீரவனச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பந்தன் தலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கின் முக்கிய கட்சியாக இருந்தாலும் எமக்கு இவர்கள் பெரியவர்கள் அல்ல.

கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கும் கருத்துக்களுக்கும் செவிசாய்க்க வேண்டிய அவசியமும் இல்லை. வடக்கில் இருந்த சிங்களவர்களை வெளியேற்றியதுடன் தற்போது பௌத்த விகாரைகளை அகற்றும் செயற்பாடுகளை கூட்டமைப்பு செய்கின்றது.

இவை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்விடயங்களில் ஏனைய கட்சிகளைப்போல் நாமும் வாய்மூடி செயற்படுவது சிங்கள பௌத்த இனத்தவருக்கு நாம் செய்யும் துரோகமாகும். அதற்காகவேனும் நாம் இவர்களின் செயற்பாடுகளை தடுக்க வேண்டும்.

### கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி

அதேபோல் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது புதிய திட்டத்தினை வகுத்து வருகின்றது. முஸ்லிம் காங்கிரசுடனான புதிய பயணத்தினை ஆரம்பித்து தமது எதிர்பார்ப்பினை நிறைவு செய்யவே முயற்சிக்கின்றது. வடக்கில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வந்த பின்னர் எம் மீதான தவறான கருத்துக்களை மக்களின் மனதில் பதிய வைத்து விட்டனர். அதேபோல் தற்போது முஸ்லிம் சமூகத்தினையும் ஏமாற்றி வடக்கு கிழக்கினை ஒன்றிணைத்து தமது ஈழத்திற்கான புதிய அத்தியாயத்தினை ஆரம்பிக்கவே திட்டம் தீட்டுகின்றனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய கூட்டணியின் பின்னணியில் தனி நாடு, தனி அதிகாரம், தனி ஆட்சி என்ற திட்டமே உள்ளது.

அதற்கு இடம்கொடுப்பது நாட்டிற்கும் அரசுக்கும் அச்சுறுத்தலாகவே அமையும்.

### ஹக்கீம் சரியான முடிபு எடுப்பார்

எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்புடனான கூட்டணியிற்கு ஒருபோதும் துணை போகாது என நம்புகின்றேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கடந்த கால சோகங்கள் வீழ்ச்சிகள் அனைத்தையும் தலைவர் ரவூப் ஹக்கீம் நன்கு அறிந்துள்ளார். அவர்கள் தற்போது அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக மாறியமைக்கும் தம்மை பலப்படுத்தியமைக்கும் அரசே காரணம். எனவே, ஹக்கீம் பகுத்தறிவு உள்ளவர் எனின் புத்திசாலித்தனமாக யோசிப்பாராக இருந்தால் ஒருபோதும் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேற மாட்டார் என நான் நினைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# திஸாநாயக்கவிற்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்பட கூடாது

## மாகாண அமைச்சர்கள் கேள்வி

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது என மத்திய மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள், அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

உயர்கல்வி அமைச்சருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்பட முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி. திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி வருவதாகவும் அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கட்சி இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அமைச்சருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படவில்லை.

தேசிய தேர்தல் ஒன்று நடத்தப்படவுள்ள நிலையில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வு வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாக மத்திய மாகாண அமைச்சர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆளும் கட்சியின் முக்கியமான மற்றுமொரு அமைச்சரான தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரட்நாயக்கவின் சகோதரரான எஸ்.பி ரட்நாயக்கவிற்கும், உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவிற்கும் இடையில் நீண்ட காலமாக கருத்து முரண்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## யாருக்கு எதுவோ?

ஓர் ஊரிலே ஒருத்தன் இருந்தான். அவனுக்கு என்ன வேலையென்றால் ஓடு மாற்றுகிற வேலை.

ஓட்டு வீடுகளைப் பழுது பார்க்கிற வேலை உடைந்து போன ஓடுகளை மாற்றிவிட்டுப் புதிய ஓடுகளைப் பொருத்திக் கொடுப்பான். ஓடு மாற்றுவதற்கு அவனுக்கு ஒரு நாள் கூலி 50 ரூபாய். அவன் ஒரு நாள் ஒரு காட்டு வழியாக அடுத்த ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான் வேலைக்காக.

நடுக்காட்டில் ஒரு ஐயனார் கோயில். அதைக் கடந்து போய்க் கொண்டிருந்த போது திடீரென்று ஒரு குரல்.

“இதோ பாரப்பா... இங்கே வா...” இந்த நடுக்காட்டில் நம்மை அழைப்பது யார்? அவனுக்குப் பயமாக இருந்தது.

ஆகவே நடையைக் கொஞ்சம் வேகப்படுத்தினான். மறுபடியும் கூப்பிட்டது அந்தக் குரல்.

“ உன்னைத்தாம்பா கூப்பிடறேன். இங்கே வா.... ”

“ எங்கேயிருந்து வருகிறது அந்தக் குரல்?” உற்றுப் பார்த்தான். அங்கே இருந்த சாமி சிலைதான் பேசியது. அதைத் தெரிந்து கொண்டபோது அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது.

“ஐயையோ... நான் ஒரு தப்பும் பண்ணலையே. என்னை ஏன் கூப்பிடுறே?”

“பயப்படாதே... உன்னோட காலடியில கொஞ்சம் தோண்டிப்பார். என்ன இருக்குன்னு தெரியும்” இவனுக்கு துணிச்சல் வந்தது. அங்கேயே உட்கார்ந்து தோண்ட ஆரம்பித்தான்.

என்ன ஆச்சரியம்! அங்கே ஒரு பானை தென்பட்டது.. வெளியே எடுத்துப் பார்த்தான். உள்ளே நிறைய துவரம் பருப்பு அளவுக்குத் தங்கக் காசுகள். அவற்றைப் பார்த்ததும் அசந்து போனான்.

இப்போது அந்தச் சிலை மறுபடியும் பேசியது.

இதோ பாருப்பா... அவ்வளவையும் ஒரு துணியில் கட்டி மூட்டையா எடுத்துக்கிட்டுப்போ....இவனுக்குத் தலைகால் புரியவில்லை. உற்சாகம். உடனே மேல் துண்டை எடுத்துத் தரையில் விரித்தான். பானையில் இருந்த அவ்வளவையும் அதில் கொட்டினான். சேர்த்துக் கட்டப் போனான். அப்போது அந்தச் சிலை பானையைச் சுத்தமாகக் காலி பண்ணிடாதே. அதுல ஒரு நாலுதங்கக் காசாவது போட்டு வை என்றது.

இவன் பார்த்தான். எண்ணி நாலே நாலுகாசு மட்டும் எடுத்துப் பானையில் போட்டான். இருந்த இடத்திலேயே பானையை வைத்து மூடிவிட்டு மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு போய் விட்டான். அடுத்த ஊரிலே ஓடு மாற்ற வேண்டிய வேலை. ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கிறான். ஆகவே அங்கே போனான். வீட்டு உத்தரத்தில் மூட்டையைக் கட்டித் தொங்கப் போட்டு விட்டு அவன் கூரை மீது ஏறி உட்கார்ந்து ஓடு மாற்ற ஆரம்பித்தான்.

அந்த வீட்டுக்கார அம்மாள் சமையல் செய்ய ஆரம்பித்தார்கள். துவரம் பருப்பு இல்லை. தீர்ந்து போயிருந்தது. சரி கடையில் போய் வாங்கிக் கொண்டு வரலாம் என்று எண்ணிப் புறப்பட்ட போது உத்தரத்திலே தொங்கிக் கொண்டிருந்த துணி மூட்டை கண்ணில் பட்டது.

என்னங்க அது மூட்டை? என்று கேட்டார்கள். கூரை மேலே உட்கார்ந்திருந்த நம்ம ஆள் “ அதுங்களா வேற ஒண்ணுமில்லீங்க... துவரம் பருப்பு வாங்கி வச்சிருக்கேன்.... வீட்டுக்காக என்றான் வீட்டுக்கார அம்மாள் ஒரு கணம் யோசித்தார்கள்.

சரி அவசரத்துக்கு இதிலேயிருந்து கொஞ்சம் எடுத்துக்குவோம். அப்புறம் வாங்கிக் கொடுத்துவிடலாம்.

இப்படி நினைத்தபடியே மெதுவாக மூட்டையைக் கீழே இறக்கிப் பார்த்தால்.. அவ்வளவும் தங்க வில்லைகள். அவ்வளவுதான். பளிச் சென்று உள்ளுக்குள் ஒரு யோசனை. இருந்த அவ்வளவு தங்கக் காசையும் தன் வீட்டிலே உள்ள ஒரு பானையிலே கொட்டிக் கொண்டு விட்டார்கள். பின்னர் கடையிலே துவரம் பருப்பு வாங்கி வந்து அந்தத் துணி மூட்டையில் போட்டுக் கட்டிப் பழையபடியே உத்தரத்தில் தொங்கவிட்டுவிட்டு உள்ளே போய்விட்டார்கள்.

மாலையில் வேலை முடிந்ததும் அவன் கீழே இறங்கி வந்தான். துணி மூட்டையைக் கீழே இறக்கினான். இறக்கும் போதே கொஞ்சம் சந்தேகம். என்ன இது ... காலையிலே கனமாக இருந்தது. இப்ப இவ்வளவு லேசா இருக்கே...!

பிரித்துப் பார்க்கிறான். உள்ளே துவரம் பருப்பு! வீட்டுக்கார அம்மாவிடம் கேட்டான். இதில தங்கம் இருந்துதே பார்த்தீங்களா? என்ன கனவு கினவு கண்டியா? என்றார்கள் அந்த அம்மாள்.

அவனால் ஒன்றும் பதில் பேச முடியவில்லை. மூட்டையைத் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டு புறப்பட்டான். போகிற வழியிலே அந்தச் சாமி சிலை.

இப்படி ஆசை காட்டி மோசம் பண்ணிட்டியே... என்று புலம்பினான். சிலை பேசியது. இதோ பாரப்பா... நான் ஒண்ணும் மோசம் பண்ணலே... இன்றைக்கு அந்தத் தங்கம் அந்த அம்மாவுக்குப் போய்ச் சேரணும்ங்கிறது விதி. அதைத் தூக்கிட்டுப் போறதுக்கு ஆள் கிடைக்கலே அதுதான் உன் தலையில் ஏற்றி அனுப்பி வைத்தேன் அவ்வளவுதான். கவலைப்படாதே. உனக்கு கிடைக்க வேண்டியது. அந்தப் பானையிலே இருக்கு. அதை எடுத்துக் கிட்டு நீ போய்ச் சேர். அவன் வேகமாக ஓடிப்போய் அந்தப் பானையை தூக்கினான். பானையிலே அவன் காலையில் போட்டு விட்டுப் போன அதே நான்கு தங்கக் காசுகள்தான் இருந்தன.

இவன் தன்னையே நொந்து கொண்டான். தரித்திர புத்தி நமக்கு. அப்பவே கொஞ்சம் நிறைய அள்ளி அதில போட்டிருக்கக் கூடாதா? என்று. யாருக்கு எது கிடைக்க வேண்டுமோ அதுதான் கிடைக்கும் என்பதை விளக்குவதற்காக சொல்லப்படுகிற கதை இது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம் எழுதுவதன் மூலம் தீர்வு கண்டு விட முடியாது

## ஜி.கே.தெரிவிப்பு

(டில்லி)

தமிழக மீனவர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவது மூலமாகவே தீர்வு கண்டு விட முடியும் என்று தமிழக அரசு தவறாக நினைத்துக் கொண்டிருப்பதாக முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, தமிழக மீனவர் பிரச்சினையில் தமிழக அரசு கடிதம் எழுதுவதால் மட்டுமே தீர்வு கிடைக்காது.

மாநில அரசு, மத்திய அரசிடம் அதிருப்தியை வெளிப்படுத்தி மீனவர் பிரச்சினைக்கு ஒரு ஆக்கபூர்வ தீர்வை காண வேண்டும்.

மத்திய அரசும் வெளியுறவுத்துறை மூலமாக இலங்கை அரசிடம் பேசி, பறிமுதல் செய்யப்பட்ட 75 படகுகள் மற்றும் மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (இ-5)

# பிணை கிடைத்ததற்காக வருத்தப்படவில்லையாம்

### ஜெயா விடுவிப்பு குறித்து கருணாநிதி அறிக்கையில் சுட்டிக்காட்டு

18 ஆண்டுகளாக பல்வேறு கட்டங்களிலும் இழுத்தடிக்கப்பட்டு காலம் கடத்தப்பட்டு வந்த ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேர் மீதான சொத்து குவிப்பு வழக்கில் பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா கடந்த செப்டெம்பர் 20ஆம் திகதியன்று தீர்ப்பளிக்கப் போவதாக அறிவித்தார்.

ஆனாலும் குற்றஞ்சாட்டப்பட்டோர் தங்களின் பாதுகாப்பு கருதி, தீர்ப்பினை செப்டெம்பர் 27ஆம் திகதிதான் வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அதையும் நீதிபதி ஏற்றுக்கொண்டு, செப்டெம்பர் 27ஆம் திகதியன்றே தீர்ப்பினை அளித்தார்.

அந்த தீர்ப்பில் ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாய் அபராதமும், நான்காண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. மேலும் சசிகலா, இளவரசி, வி.என். சுதாகரன் ஆகியோருக்கும் 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இதற்கான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் சட்ட விதி முறைகளின் அடிப்படையில் குறிப்பிட்டு நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா ஆயிரத்து136 பக்கங்களில் விரிவான தமது தீர்ப்பில் விளக்கியிருக்கிறார்.

இந்த தீர்ப்பு வெளியானவுடன், அதைப்பற்றி நான் எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை. காரணம், இது முக்கியமான் வழக்கு என்பதால், எச்சரிக்கை உணர்வுடன் பொறுமையாக இருந்து தீர்ப்பு முழுவதையும் கவனமாக படித்த பிறகு விளக்கலாம் என்று எண்ணினேன்.

மேலும் அ.தி.மு.க.வின் தலைவிக்கு தண்டனை வழங்கப்பட்டுவிட்டது என்பதற் காக நான் மகிழ்ச்சி அடையவும் இல்லை தற்போது அவர் உச்சநீதிமன்றத்தில் நிபந்தனை பிணையில் விடுவிகக்பட்டதற்காக வருத்தப்படவும் தயாராக இல்லை.

ஆனால் அ.தி.மு.க.வினர் சிலர் நான்தான் ஏதோ ஜெயலலிதா மீது பொய் வழக்குப்போட்டதாக கூறி கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? அன்றைய ஜனதா கட்சித்தலைவர் டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி தமிழக ஆளுநரிடம் அளித்த புகார் மனுவின் காரணமாக ஜெயலலிதாவுக்கு எதிரான இந்த வழக்கு ஆரம்பமானது.

இவ்வாறு கருணாநிதி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மாநிலத் தேர்தல்களில் பாஜக அமோக வெற்றி

### மராட்டிய மாநிலத்தில் பா.ஜனதா கூட்டணி ஹரியானாவில் தனித்து ஆட்சியை பிடித்தது

288 சட்டசபை தொகுதிகளை கொண்ட மராட்டிய மாநிலத்தில் காங்கிரஸ்-தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்தது. தேர்தலில் உடன்பாடு ஏற்படாததால் இரு கட்சிகளும் தனித்து போட்டியிட்டன. இதேபோல் பாரதீய ஜனதா-சிவசேனா கூட்டணியும் முறிந்ததால் முக்கிய கட்சிகளின் பலத்தை பரிசோதிக்கும் களமாக இந்த சட்டசபை தேர்தல் அமைந்தது.

காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் பா.ஜனதா, சிவசேனா, ராஜ் தாக்கரேயின் மராட்டிய நவநிர்மாண் சேனா ஆகிய கட்சிகள் தனித்தனியே தேர்தல் களத்தை சந்தித்ததால் 5 முனை போட்டி நிலவியது.

தேர்தலின் போது 64 சதவீதம் வாக்குகள் பதிவாகின.

**பா.ஜனதாவுக்கு 122 இடங்கள்**


வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் பாரதீய ஜனதாவுக்கு கூடுதல் இடங்கள் கிடைக்கும் என்று தெரிவித்தன. அதேபோல் அந்த கட்சி 122 இடங்களில் வெற்றி பெற்றது. தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய அளவுக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை என்ற போதிலும், தனிப்பட்ட முறையில் பாரதீய ஜனதா பெரிய கட்சியாக விளங்குகிறது.

முன்பு பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்த சிவசேனா 63 இடங்களில் வெற்றி பெற்று 2-ஆவது இடத்தை பிடித்தது. காங்கிரஸ் கட்சிக்கு 3-ஆவது இடமே கிடைத்தது. அந்த கட்சி 42 தொகுதிகளில் வெற்றி பெற்றது. சரத்பவாரின் தேசியவாத காங்கிரசுக்கு 41 இடங்கள் கிடைத்தன. மராட்டிய நவநிர்மாண் சேனா ஒரேயொரு தொகுதியில் வெற்றி பெற்றது. சுயேச்சைகள் மற்றும் பிற கட்சிகளின் வேட்பாளர்கள் 19 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

**தலைவர்கள் வெற்றி-தோல்வி**

தெற்கு காரத் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் பிரிதிவிராஜ் சவான் (காங்கிரஸ்) வெற்றி பெற்றார். காங்கிரஸ் தேர்தல் பிரசார குழு தலைவராக பணியாற்றிய முன்னாள் முதலமைச்சர் நாராயண்ரானே அதிர்ச்சி தோல்வியை தழுவினார்.

பா.ஜனதா சார்பில் போட்டியிட்ட தலைவர்கள் தேவேந்திர பட்னாவிஸ், ஏக்நாத் கட்சே, வினோத் தாவ்டே, மறைந்த மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேயின் மகள் பங்கஜா முண்டே ஆகிய அனை




வரும் வெற்றி கனியை பறித்தனர்.

பாரதீய ஜனதா சார்பில் மும்பை சயான் கோலிவாடா தொகுதியில் போட்டியிட்ட தமிழரான தமிழ்ச்செல்வன் வெற்றிவாகை சூடினார்.

பாரதீய ஜனதாவுக்கு கிடைத்த வெற்றியை அந்த கட்சியின தொண்டர்கள் வெடி கொளுத்தியும் இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.

**கூட்டணி ஆட்சி**

மராட்டிய தேர்தலில் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காததால் தொங்கு சட்டசபை ஏற்பட்டுள்ளது. என்றாலும் 122 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக விளங்கும் பாரதீய ஜனதா மராட்டியத்தில் கூட்டணி ஆட்சி அமைக்கிறது. மராட்டியத்தில் முதல் தடவையாக பா.ஜனதா தலைமையிலான அரசு அமைய இருககிறது. அந்த கட்சி ஆட்சி அமைபபதற்கு இன்னும் 23 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

தனது பழைய கூட்டணி கட்சியான சிவசேனாவின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைக்க பாரதீய ஜன்தா முயன்று வருகிறது. இது தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கி உள்ளது.

கூட்டணி அரசு அமைக்க பா.ஜனதா அழைப்பு விடுத்தால், அதை பரிசீலிப்போம் என்று சிவசேனா மூத்த தலைவர் அனில் தேசாய் எம்.பி. தெரிவித்தார்.

**தேசியவாத காங்கிரஸ் திடீர் ஆதரவு**

இந்த நிலையில் திடீர் திருப்பமாக பாரதீய ஜனதா ஆட்சி அமைக்க வெளியில் இருந்து ஆதரவு அளிக்க தயார் என்று தேசியவாத காங்கிரஸ் அறிவித்து உள்ளது.

இதுகுறித்து அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் பிரபுல் பட்டேல் கூறுகையில், "தேர்தலில் பாரதீய ஜனதா அதிக இடங்களில் வெற்றி பெற்று பெரிய கட்சியாக விளங்குகிறது. இதனால் மாநில நலன் கருதியும், நிலையான அரசு அமையவும் பாரதீய ஜனதா ஆட்சி அமைக்க நாங்கள் வெளியில் இருந்து ஆதரவு கொடுக்க தயாராக உள்ளோம்" என்றார்.

**ஹரியானாவில் பா.ஜனதா ஆட்சி**

90 உறுப்பினர்களை கொண்ட ஹரியானாமாநில சட்டசபைக்கு நடந்த தேர்தலில் பதிவான வாக்குகளும் நேற்று முன் தினம்எண்ணி முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இங்கு மொத்தம் உள்ள 90 இடங்களில் பாரதீய ஜனதா 47 இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சியிடம் இருந்து பாரதீய ஜனதா ஆட்சியை கைப்பற்றி இருக்கிறது. ஹரியானாவில் பாரதீய ஜனதா தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது.

சவுதாலாவின் இந்திய தேசிய லோக்தளம் கட்சிக்கு 19 இடங்களும், காங்கிரசுக்கு 15 இடங்களும், எச்.ஏ.சி.பி.எல். கட்சிக்கு 2 இடங்களும் கிடைத்தன. பகுஜன் சமாஜ், சிரோமணி அகாலிதளம் ஆகிய கட்சிகள தலா ஒரு தொகுதியில வெற்றி பெற்றன. சுயேச்சைகள் 5 தொகுதிகளில் வெற்றி பெற்றன.

பிரசார குழு தலைவராக பணியாற்றிய முன்னாள் முதலமைச்சர் நாராயண் ரானே அதிர்ச்சி தோல்வியை தழுவினார்.

பா.ஜனதா சார்பில் போட்டியிட்ட தலைவர்கள் தேவேந்திர பட்னாவிஸ், ஏக்நாத் கட்சே, வினோத் தாவ்டே, மறைந்த மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேயின் மகள் பங்கஜா முண்டே ஆகிய அனைவரும் வெற்றி கனியை பறித்தனர்.

பாரதீய ஜனதா சார்பில் மும்பை சயான் கோலிவாடா தொகுதியில் போட்டியிட்ட தமிழரான தமிழ்செல்வன் வெற்றிவாகை சூடினார்.

பாரதீய ஜனதாவுக்கு கிடைத்த வெற்றியை அந்த கட்சியின் தொண்டர்கள்பட்டாசு வெடித்தும, இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள் (இ-5)

## பாரதச் செய்தி

# மக்கள் மாற்றத்தை விரும்பியுள்ளனர் என்பதை மாநில தேர்தல் முடிபுகள் வெளிப்படுத்துகின்றன

## காங்கிரஸ் கருத்து

மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்துள்ளனர் என்று மகாராஷ்டிரம், ஹரியானா சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து காங்கிரஸ் தலைமை கருத்து கூறியுள்ளது.

பாஜகவின் வெற்றிக்கு வாழ்த்து கூறியுள்ள காங்கிரஸ் தலைமை, இம்மாநிலங்களில் அரசு அமைக்கும் கட்சிகள் தேரதல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் என நம்புவதாக கூறியுள்ளது.

இதுகுறித்து சோனியா காந்தி விடுத்துள்ள அறிக்கையில், "மகாராஷ்டிரம், ஹரியானா சட்டமன்ற தேர்தலில் மக்களின் தீர்ப்பை காங்கிரஸ் பணிவுடன் ஏற்கிறது. இம்மாநிலங்களில் ஆக்கபூர்வமாகவும், விழிப்புடனும் செயற்பட உறுதி ஏற்கிறோம்.

எங்கள் மீது நம்பிக்கை கொண்டு மகாராஷ்டிர மக்கள் தொடர்ந்து 3 முறையும் ஹரியானா மக்கள் தொடர்ந்து 2 முறையும் எங்களுக்கு வாக்களித்தனர். இங்கு ஆட்சி அமைக்கும் கட்சிகள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றும் என நம்புகிறோம்" என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி விடுத்துள்ள அறிக்கையில், "மக்களின் தீர்ப்பை ஏற்கிறோம். மகாராஷ்டிரம் மற்றும் ஹரியானாவில் எங்களின், முறையே 15 மற்றும் 10 ஆண்டுகால ஆட்சிக்குப் பின் மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்துள்ளனர்.

பாஜக வெற்றிக்கு எனது வாழ்த்துகள். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற காங்கிரஸ் கடுமையாக உழைக்கும்" என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஷகீல் அகமது கூறும்போது, "தேர்தல் தோல்வி குறித்து காங்கிரஸ் ஆராயும்" என்றார். (இ-5)

# கத்தி திரைப்படம் வெளியிடக்கூடாது

(சென்னை)

விஜய் நடித்துள்ள கத்தி படத்தைத் திரையிடக் கூடாது என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எச்சரித்துள்ளார். இதுகுறித்து அவர். அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில், நடிகர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள கத்தி திரைப்படம் தீபாவளிக்கு வெளிவருவதாகத் தெரிய வருகிறது. இந்தப் படத்தை லைக்கா மொபைல் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்நிறுவனத்தின் உரிமையாளரான ஈழத்தைச் சேர்ந்த சுபாஷ்கரனும் இலங்கை ஜனாதிபதியின் மகனும் இணைந்து தொழில் செய்து வருவதாக செய்திகள் வருகின்றன.

இலங்கை ஜனாதிபதியுடன் தொழில் ரீதியாக நட்புறவு கொண்டுள்ள சுபாஷ்கரன் தமிழ்த் திரையுலகில் முதலீடு செய்வது தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திரையுலகின் மூலம் தமிழக அரசியலில் ஊடுருவ இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சிப்பதாகவும் தமிழகத்தில் இளம் தலைமுறையினர் மஹிந்தவுக்கு எதிராக அணி திரண்டு விடக்கூடாது என்பதற்காகவும் இதுபோன்ற முயற்சிகள் நடப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, கத்தி திரைப் படத்தை தமிழகத்தில் எங்கும் திரையிடக் கூடாது. இது நடிகர் விஜய், இயக்குநர் முருகதாஸ் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கை ஆகாது.

இது மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான கோரிக்கை என்பதை புரிந்து கொண்டு திரைப்பட வெளியீட்டாளர்களும் திரையரங்க உரிமையாளர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழக மீனவர்கள் மீது கச்சதீவு அருகே தாக்கு

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியை சேர்ந்த மீனவர்கள். ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட விசைப்படுக ளில் கச்சதீவு அருகே நேற்று முன்தினம் அதிகாலை மீன் பிடித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு மீன் பிடி சாதனங்களையும் சேதப்படுத்தினர். மேலும், படகு [illegible] மதிப் [illegible] கொள்ளையடித்து சென்றுள்ளதாக மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர் (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வென்ற உலகக் கிண்ணமே இலங்கையும் வெல்ல ஊக்கப்படுத்தியது

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க. இவரது தலைமையில் இலங்கை அணி 1996-ம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இது தொடர்பில் டில்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் கூறியதாவது,

1983-ல் இந்திய அணியின் தலைவராக இருந்த கபில்தேவ் உலகக் கிண்ணத்தை கையில் ஏந்தி நின்றதை பார்த்தேன். இது என்னை ஊக்கப்படுத்தியது. கவாஸ்கர், கபிலதேவ் ஆகியோரை தவிர்த்து பெரிய நட்சத்திர வீரர்கள் இல்லாத இந்திய அணி வலிமையான மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது. இதை வைத்து இலங்கையால் உலகக் கிண்ணத்தை ஏன் வெல்ல முடியாது என்று நினைத்தேன்.

இதேபோல 1992-ல் இம்ரான் கான் தலைமையில் பாகிஸ்தான் உலக கிண்ணத்தை வென்றதையும் என்னால் நம்ப இயலவில்லை. இதுவும் என்னை ஊக்குவித்தது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (க)

# தற்போதைய இந்திய அணி நெருக்கடிகளை சமாளிக்கும்




தோனி தலைமையிலான தற்போதைய இந்திய அணி நெருக்கடியை சமாளிக்க கூடியது என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

2003-ம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பொன்ரிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வி அடைந்தோம். ஆனால் தற்போதைய இந்திய அணி திறமையுடன் இருப்பதால் உலகக் கிண்ணத் தொடரில் நெருக்கடியை சமாளிக்கும். அவ்வளவு எளிதில் சரண்டர் ஆகிவிடாது.

2003 உலகக் கிண்ண இறுதிப் போட்டி ஒரு பக்கமாகவே அமைந்துவிட்டது. நெருக்கடிகள் எப்போதுமே நேர்மறை, எதிர்மறை என இரண்டு வித தாக்கத்தை ஏற்படுத்தும். நம்மிடம் உள்ள பல்வேறு திறமைகள் முடங்கி இருக்கிறது என்பதை ஒரு கட்டத்தில் உணர்ந்தேன். களத்தில் ஆக்ரோஷத்துடன் செயல்பட்டால் மட்டுமே அந்த திறமை வெளிப்படும்.

2002-ல் லோர்ட்ஸ் மைதானத்தில் வெற்றிக்கு பிறகு பனியனை கழற்றி ஆக்ரோஷப்பட்டது தவறுதான். நெருக்கடியில் இருந்து விடுபட்ட வேகத்தில் அப்படிச் செய்து விட்டேன்.

இவ்வாறு கங்குலி கூறியுள்ளார்.

2003 உலக கிண்ணப் போட்டியில் கங்குலி தான் இந்திய அணியின் தலைவராக இருந்தார். இறுதிப்போட்டியில் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் 125 ஓட்டங்களால் தோல்வி அடைந்திருந்தது. (க)

## இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையால் நடத்தப்படும் அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டியில் மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையும் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரியும் மோதவுள்ளது. (க)

# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து

## கொல்கத்தா - டில்லி ஆட்டம் சமநிலை

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியில் கொல்கத்தா - டில்லி இடையிலான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

8 அணிகள் இடையிலான இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடர் (ஐ.எஸ்.எல்.) இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் மாலை நடந்த 7-வது லீக் ஆட்டத்தில் அட்லெடிகோ டி கொல்கத்தா- டில்லி டைனமோஸ் அணிகள் சந்தித்தன.



ஆட்டம் தொடங்கிய முதல் நிமிடத்தில் இருந்தே பரபரப்பு தொற்றிக் கொண்டது. ரசிகர்களின் உற்சாகமான ஆதரவுடன் களம் இறங்கிய கொல்கத்தா அணி 49-வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தது. கொல்கத்தா வீரர் பிக்ருவின் பனியனை டெல்லியின் ராய் மாக்கர்ஸ் பிடித்து இழுத்ததற்காக பெனால்டி கிடைத்தது. பெனால்டி வாய்ப்பில் கொல்கத்தாவின் ஜோப்ரே (ஸ்பெய்ன்) கோல் அடித்தார்.

இதன் பின்னர் 73-வது நிமிடத்தில் டெல்லி வீரர் பவெல் எலியாஸ் (செக் குடியரசு நாட்டவர்) பதில் கோல் திருப்பி அதிர்ச்சி அளித்தார். போட்டியின் ஒரு கட்டத்தில் டில்லி வீரரான இத்தாலியை சேர்ந்த அலெக்சாண்ட்ரோ டெல் பியரோ, எதிரணி வீரர் டென்சில் பிராங்கோவை காலால் இடறியதற்காக இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. கொல்கத்தா அணியினர் டெல் பியரோவை முற்றுகையிட்டு தள்ளி விட்டனர். பிறகு கோல்,காப்பாளர் தலையிட்டு சமாதானப்படுத்தினார்.

இதைத் தொடர்ந்து 88-வது நிமிடத்தில் கொல்கத்தாவின் ராகேஷ் மாசி 2-வது மஞ்சள் அட்டை பெற்றதால் வெளியேற்றப் பட்டார். கடைசி சில நிமிடங்களில் கொல்கத்தா 10 வீரர்களுடன் ஆடிய போதிலும் அதை டெல்லி அணி சாதகமாக மாற்றிக் கொள்ள முடியவில்லை. விறுவிறுப்பான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது. 3-வது போட்டியில் விளையாடிய கொல்கத்தா அணி 2 வெற்றி, ஒரு சமனிலை என 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. டில்லி அணிக்கு இது 2-வது சமனிலை பெறுபேறாகும்.

இதைத் தொடர்ந்து கவுகாத்தியில் இரவு நடந்த ஆட்டத்தில் கவுகாத்தி நோர்த் ஈஸ்ட் யுனைனெட்-எப்.சி. கோவா அணிகள் இடையிலான ஆட்டமும் 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையில் முடிந்தது. கோவா அணியில் 17-வது நிமிடத்தில் கிரேகோரியும், 36-வது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பில் கவுகாத்தி வீரர் கோகேவும் கோல் அடித்தனர்.

இன்று சென்னை நேரு அரங்கில் நடக்கும் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி.-கேரளா பிளாஸ்டர்ஸ் அணிகள் மோதுகின்றன. (க)

# நெய்மர், மெஸ்ஸி கலக்கல் பார்சிலோனா அணி வெற்றி



பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர்கள் நெய்மர், மெஸ்ஸி கோல் அடிக்க அந்த அணி எய்பர் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஸ்பெயினில் நடக்கும் லா லிகா கால்பந்து சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் எய்பர் - பார்சிலோனா அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணியின் ஸாவி 60-வது நிமிடத்திலும், நெய்மர 72-வது நிமிடத்திலும் கோல் அடி த்தனர்.

இதைத் தொடர்ந்து, 74-வது நிமிடத்தில் நெய்மர் கடத்திக் கொடுத்த பந்தை மெஸ்ஸி மின்னல் வேகத்தில் கோல் கம்பத்துக்குள் நுழைத்தார். கடைசி வரை ஒரு கோல் கூட எய்பர் அணியால் அடிக்க முடியவில்லை.

இதனால் பார்சிலோனா அணி 3-0 என்ற கணக்கில் எய்பர் அணியை வீழ்த்தியது. பார்சிலோனா அணியில் இணைந்து பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள மெஸ்ஸி இந்த போட்டியில் ஒரு கோல் அடித்ததன் மூலம் மொத்தம் 250 கோல்களை அடித்துள்ளார். தெல்மோ ஸரா 251 கோல் போட்டு (1950) முதலிடத்தில் உள்ளார்.

இவரது சாதனையை முறியடித்து ஸ்பானிஷ் லீக் லா லிகா கால்பந்து போட்டித் தொடர வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற மகத்தான சாதனையை படைக்க இன்னும் மெஸ்ஸிக்கு 2 கோல்கள் தேவையாக இருக்கிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமையை பாது...

இந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.


எதிர்வரும் காலங்களில் நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் தமது அமைப்பு விழிப்புடன் இருக்கும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு முதல் கட்டமாக அபாய எச்சரிக்கை விடுப்பதாகவும் ரெட்யூனியன் அமைப்பின் ஊடக அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தற்போது எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள இரகசிய அமைப்புக்களையே பயன்படுத்துகின்றது. நாட்டைப் பாதுகாக்கும் தேசப் பற்றாளர் அமைப்பு என்ற பெயரில் அரச புலனாய்வுத் துறையினரைக் கொண்டு அதற்கான ஒரு இரகசிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் இன்னொரு இரகசிய அமைப்பு ஏட்டிக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்டிருப்பது புலனாய்வாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

எனினும் இந்த அமைப்பு ஜே.வி.பியின் இளைஞர் அணி உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (எ-11)

# இந். பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார் கோத்தபாய




(புதுடில்லி)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லி, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பு புதுடில்லி நோர்த் புளக் அலுவலத்தில் இடம்பெற்றதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இதன்போது பல்வேறு பாதுகாப்பு விடயங்கள் குறித்து பேசப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது இந்திய பாதுகாப்பு செயலாளர் ஆர்.கே. மதுரும் சமுகம் அளித்திருந்தார்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர இந்திய பாதுகாப்பு செயலாளர் மதுர், இலங்கைக்கு வந்து கோத்தபாயவை சந்தித்திருந்தார். (எ-11)

# பங்காளிக்...

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும் தேர்தலுக்கான திகதி இன்னமும் முடிவு செய்யப்பட வில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. தேர்தல் நடைபெறும் திகதி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதை இப்போது நான் உறுதியாகக் கூறமாட்டேன். பொதுத தேர்தலின் போது இன, மத வேறுபாடுகளை ஒதுக்கி தேசிய நலனை முன்னுரிமைப்படுத்தி மக்கள் தமது முடிவை எடுக்க வேண்டும். தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும் என்றார். (எ-11)

# வர்த்தகர்களுக்கு...

நிறுவனங்கள் அமைப்பதற்கு ஊக்குவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும் மன்னாரில் முசலி பிரதேச செயலகப் பிரிவில் கொண்டச்சி பிரதேச கல்லாறு கிராமத்திலும் பாரிய நிலப்பகுதி ஒன்று சிங்கள வர்த்தகர்களின் தொழில் முயற்சிகளுக்கு ஒதுக்கப்படவுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நடவடிக்கை என்ற பெயரில் இவ்வாறு காணிகளை பகிர்ந்தளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இங்கு தொழில்துறைகளை ஆரம்பிக்கும் வர்த்தகர்களுக்கு இராணுவத்தினரின் உதவியும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (எ-11)

# ரணில் மலேசியா சென்...

உள்ள மாநாடொன்றில் கலந்து கொள்ளவுள்ளார். அது தமிழீழத்திற்கே வழி செய்யும் மாநாடாக அமையப் போகின்றது.

ஏனெனில் தற்போது விடுதலைப் புலிகளும் அவர்களது ஆதரவு சக்திகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கின்றார்கள்.

அதற்கான காரணம் 13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ரணில் கொடுத்திருக்கும் உத்தரவாதம்தான். அது மட்டுமன்றி தான் வெற்றி பெற்றால் பத்தே நாட்களில் வடக்கிலிருந்து ஒட்டுமொத்த ராணுவத்தையும் வாபஸ் பெறுவதாகவும் ரணில் உறுதியளித்துள்ளார்.

ரணிலின் இவ்வாறான நடவடிக்கைகள் தமிழீழம் என்றொரு நாடு மலர சீக்கிரம் வழியமைத்துக் கொடுத்துவிடும்.

ஜனாதிபதி பெற்றுத் தந்த நாட்டின் சுதந்திரம் மீண்டும் பறிபோகும். எனவே பொதுமக்கள் இவ்வாறான சதிகளுக்கு துணைபோகக் கூடாது என்றும் விமல் வீரவன்ச தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (எ-11)

# புலிகளின் தேவையை...

நாட்டவர்கள் என்ற நிலைப்பாட்டிலேயே கடமைகளை செய்கின்றனர. இவர்களிடம்தேசிய வாதம்கிடையாது.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் தொடர்புகளை வைத்துக் கொண்டு அவர்களின் நிகழ்ச்சி நிரலிலேயே செயலாற்றுகின்றனர்.

வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.

இதேபோன்று தான் வெளிநாடுகளிலுள்ள தூதுவர்களும் நாட்டுக்கு எதிரான விடயங்களுக்கு பதில் கொடுப்பதில்லை. எனவே அரசு இவ்விடயம் தொடர்பில் அதிக கவனம செலுத்த வேண்டும்.

புலிகள் மீண்டும் தலை தூக்கலாம என்ற அச்சுறுத்தலை அரசுக்கு வழங்குவதற்காகவே பிரித்தானியாவின் ஆலோசனைக்கமைய ஐரோப்பிய ஒன்றியம் தடையை நீக்கியது.

இவ்வாறு அழுத்தம் கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவைகளையும் புலிகளின் தேவைகளையும் நிறைவேற்றவும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவுமே முயற்சிகள் மேற கொள்ளப்படுகிறது.

அரசாங்கம் இந்த அச்சுறுத்தலுக் கெல்லாம் அடிபணியாது. நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

புலிகள் செய்த அநியாயங்களை சாட்சியங்களுடன் உயர்நீதிமன்றத்தில் முன்வைத்து மீண்டும் புலிகளுக்கு எதிரான தடையை கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்றும் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார். (எ-11)

# வெள்ள அனர்த்தத்தினால்...

ணம் வழங்க உள்ள தாகவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பொம்மைவெளி, நாவாந்துறை ஆகிய இடங்களிலேயே வெள்ளத்தினால் பெருமளவான குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

யாழில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையின் காரணமாக பெரும்பாலான பிரதேசங்களில் மழை நீர தேங்கி நின்றது.

குறிப்பாக தாழ்நிலப் பிரதேசங்களான பொம்மைவெளி, நாவாந்துறை ஆகிய இடங்களில் மழை வெள்ளம் அளவுக்கதிமாக தேங்கிக் காணப்பட்டது.

குறித்த பகுதிகள் வயற்காணிகளாக காணப்பட்டமையால் மழை வெள்ளம் இறங்காமல் தேங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இங்குள்ள வடிகால்களும் திட்டமிடப்படாத முறையில் அமைக்கப்பட்டுள்ளதனால் நீர் வழிந்தோட இடமின்றி வாய்க்கால்களும் நீர் தேங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

குப்பைகளால் நிரம்பியுள்ள இப்பிரதேசம் பெரும் சுகாதார சீர்கேட்டுடனும் டெங்கு நுளம்பு பெருகும் அபாயத்துடனும் காணப்படுகின்றது.

இம்மக்களின் நிலை தொடர்பில யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய வேந்திரம் தெரிவிக்கையில்,

நாவாந்துறை, பொம்மை வெளி பிரதேசங்களில் 316 குடும்பங்களினைச் சேர்ந்த ஆயிரத்து 256 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜே/87 சோனக தெரு தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 119 பேரும், ஜே/85 நாவாந்துறை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேரும், ஜே/88 புதிய சோனக தெரு கிராம சேவையாளர் பிரிவில் 272 குடும்பங்களைச சேர்ந்த ஆயிரத்து 69 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள வடிகால் புனரமைப்பு, வெள்ள நிவாரணம் தொடர்பில் யாழ. அரச அதிபருக்கு கடிதமொன்றும் அனுப்பியிருந்தோம்.

அதன்பயனாக அனர்த்த முகாமைத்துவ அலுவலர்கள் இருவர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர் என்றார் அவர். (எ-4)

# ரணிலுக்கு ஆத...

அமைச்சர்கள் பலரும் சந்திரிகாவுடன் இணைந்து ரணிலுக்கு ஆதரவளிக்க முன்வரவுள்ளதாகவும் நம்பகமான தகவல் வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தற்போதையநிலையில் அரசாங்க தரப்பில் இருந்து 29 பேர் எதிர கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையே சந்திரிகா குமாரதுங்கவின் வருகை குறித்து அரசாங்கத்தரப்பு உனனிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

அவர் ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தால், சந்திரிகாவையும் புலிகளுடன் தொடர்புபடுத்தி செய்திகளை பரப்புவதற்கு ஆளும் தரப்பின் ஊடக முக்கியஸ்தர்கள் தயாராக உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சந்திரிகா அரசாங்கத்தில் நடைபெற்ற ஊழல்கள், மோசடிகள் தொடரபான விபரங்களையும் எதிர்வரும் காலங்களில் ஊடகங்கள் வாயிலாக கசிய விடுவதற்கு அரசுத்தரப்பு தீர்மானித்துள்ளது. (எ-11)

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்
கிளிநொச்சி A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால் 0771516537
யாழ்ப்பாணம் 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி மடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960
துறைந்த V2 Travels and Tours (Pvt) Ltd (8132)
கட்டணத்தில் ● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாக்கள் சேவை










# துயர் பகிர்கிறோம்

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் (யாழ்கோ) பணிப்பாளர் சபையில் மிக நீண்ட காலமாக ஆர்வமும் அர்ப்பணிப்பும் மிக்கதொரு உறுப்பினராகத் திகழ்ந்த திருமதி ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம் அவர்கள் 20.10.2014-ம் திகதி தமது 72-வது வயதில் இறையடி சேர்ந்தமை; யாழ்கோவின் வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டு மகிழ்ந்த அனைவருக்கும் துயர் தரும் செய்தியாகும் என்றால் அது மறுப்பாரெவருமில்லை! (8124)

அம்மா அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையை இழந்து தவிக்கும் யாழ்கோ நிறுவனத்தினருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

யாழ்கோ பணியாளர்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org